"தாயகம்"

மு. கருணாநிதி

...ாவிட நல உரிமைச் சங்கத்தாரால்
வெளியிடப்பட்டது.
ஆசிர்வாதபுரம் : : சென்னை 1
விலை 0—8—0

நன்றி உரையுடன் எங்கள் கடமை

அண்மையில் ஆசீர்வாதபுரம் ஆதிதிராவிட நல உரிமைச் சங்கத்தின் ஆதரவில் திரு. கருணாநிதி அவர்களையும் M. G. ராமச்சந்திரன் அவர்களையும் கொண்டு "தாலமுத்து நடராசன்" நூல் நிலையம் திறக்க ஏற்பாடு செய்திருந்தோம். எதிர்பாராத வேலை நிமித்தம் காரணமாய் திரு. M. G. R. அவர்கள் வர இயலவில்லை. திறப்பு விழாவில் தலைமை தாங்கும் பொறுப்பும் நூல் நிலையம் திறந்து வைக்கும் இரண்டு பொறுப்பையும் தோழர் கருணாநிதி அவர்களே ஏற்று சொற்பொழிவாற்றி விழாவை சிறப்புற நடத்தி வைத்தார்கள். பெருமைப் படுகிறோம். பூரிப் படைகிறோம். அந்த நாளில் வறுமையில் நெளிந்து வாழும் நாம் எங்களால் இயன்ற அளவு நூல் நிலையத்தை செவ்வனவே நடத்திக் கொண்டுதான் இருக்கின்றோம்.

திரு. மு. க— M. G. R. இருவராலும் உருவாக்கப் பட்ட நூல் நிலையம் இருவராலும் முக்கிய பங்கு கொண்டு உருவாக்கப்பட்டு வெளிவந்திருக்கும் "நாம்" திரைப்படக் கதை வசனத்தை புத்தக வடிவில் தாலமுத்து நடராசன் நூல் நிலைய வளர்ச்சிக்கென்றே வெளியிடும் நேரத்தில் கதை முழுவதிலும் சுயமரியாதை பிரச்சாரமும் படக் கடைசியில் வாழ்க சுயமரியாதை ! வெல்க பகுத்தறிவு !! என்று பிரச்சாரம் நடப்பதால், எங்கள் பணி பிரச்சாரம் சங்க வளர்ச்சி, இரண்டு கொள்கைகளை வைத்தே இயன்ற தொண்டை புத்தக ரூபத்தில் புகுத்துகிறோம். இதனால் எவ்வளவு துன்பம் நேரினும் கவலையில்லை, என்ற எங்கள் முழு நோக்கத்தோடு வெளிவரும் இச்சிறு நூலை தோழர்கள், பெருவாரியாக வாங்கி தாலமுத்து நடராசன் நூல் நிலையத்தை மேலும் செவ்வனவே நடக்கச் செய்வார்கள் என்ற நம்பிக்கையோடு தோழர் மு. கருணாநிதி அவர்களுக்கும். M. G. ராமச்சந்திரன் அவர்களுக்கும் நன்றி கடமைப் பட்டுள்ளோம். முன் வருவாய் எதுவும் எதிர் பாராது அள்ளிக் கொட்டி உதவிய ஆதி அச்சகத்தாருக்கும் இதனை அழகுற தொகுத்து உதவிய S. P. ஷண்முகவேல் அவர்களுக்கும் எங்கள் நன்றி என்றும் உரித்தாகுக.

இப்படிக்கு

ஆசீர்வாதபுரம் ஆதிதிராவிட நல உரிமைச் சங்கத்தார்.

நடிகர்கள் :

M. G ராம்சந்தர்	குமரன்
M. N. நம்பியார்	மாத்திரை
S. S. வீரப்பா	மலையப்பன்
M. G. சக்ரபாணி	சஞ்சீவி வைத்தியர்
N. S. நாராயண பிள்ளை	ஜீவானந்தர்
கொட்டாபுளி ஜெயராமன்	பயில்வான் பீமசேனன்
N. சங்கர மூர்த்தி	பூசாரி
T. M. கோபால்	அண்ணுமலை
A. C. திருசப்பன்	மாணிக்கம்
R. M. சேதுபதி	தங்கப்பன்
S. M. திருப்பதிசாமி	
M. M. A. சின்னப்பா	
T. K சின்னப்பா	மற்றும் பலர்

நடிகைகள் :

V. N. ஜானகி	மீனு
P. K. சரஸ்வதி	பிரேமா
M. S. S. பாக்கியம்	தைலம்
S. R. ஜானகி	வேதவல்லி, நாராயணி
M. ஜெயஸ்ரீ	ஞானம்

மற்றும் பலர்.

பின்னணி பாடியவர்கள் :

சிதம்பரம் S. ஜெயராம், K. R. செல்லமுத்து,
A. M. ராஜா, நாகூர், M. அனிபா, M. L. வசந்த குமாரி,
ஜிக்கி, A. P. கோமளா T. R. கெஜலட்சுமி

சங்கீத டைரக்டர் சிதம்பரம் S. ஜெயராம்

கதை, வசனம், பாட்டு...

மு. கருணாநிதி

பாட்டு ' ஆயிரம் தெய்வங்கள் '—பாரதியார்.

சினரியோ, எடிட்டிங் & டைரக்ஷன். A. காசிலிங்கம்

தயாரிப்பாளர் ஜூபிடர் & மேகலா பிக்சர்ஸ்

"நாகம்"

(திரைக்கதை முழுவசனம்)

வசனம் :—மு. கருணாநிதி

தயாரிப்பு :—எஸ். பி. சண்முகவேல்

காட்சி 1

மறுமலர்ச்சி எண்ணம் கொண்ட வாலிபன் குமரன் ஆனைத் தொலைத்துவிட சில துரோகிகள் சிளம்பினர். அன்னையின் வேண்டுகோள்படி அவன் வெளியூர் புறப் பட்டான். வரும் வழியில்.....

ஒரு கிராமத்தில் மாரிக்கு பூஜை நடந்து கொண்டிருக் கிறது. அப்போது குமரன் அவனது அன்னையுடன் வரு கிறான். எதிரே வந்த கிராமத்தில் ஒருவரான ஜீவானந்தர் குமரனை சந்திக்கிறார்.

குமரன் :-ஹாம் ..என்னுங்க அது கொண்டாட்டம்...?

ஜீவானந்தர் :-கொண்டாட்டம் ஒண்ணுமில்லேப்பா... நம்ம திண்டாட்டத்தைப் போக்க தேவிக்கு பூஜை நடத்து றோம்.

கும :-பூஜையா.....!

ஜீவா :-ஊரிலே மழை இல்லாமல் விளைச்சல் இல்லே. விளைச்சல் இல்லாமல் ஜமீனுக்கு வரி கொடுக்க சக்தி இல்லே. அதனால் மாரியாத்தாளுக்கு பூசை நடத்துகிறோம்.

கும :-ஓ...ஹோ...அய்யா...ஜாக்கிரதை! பூஜை அதிக மாகி டிலம் மழையும் சேர்ந்து வந்திடப் போகுது.

ஜீவா :-என்னப்பா பண்றது ஜனங்கள் எப்படி போறாளோ, அப்படித் தானே நாமும் போகணும்.

கும :-உங்கள் கண்ணீரைக் கண்டு கருணை காட்டாத மாரி—பன்னீரில் மயங்கி விடுவாள் என்றும்...நீங்கள் அவளை ஏமாற்றுகிறீர்கள் என்று தானே அர்த்தம்.

ஜீவா :-அதுவும் சரிதான்! நீ சொல்றதும் உண்மை தான்! ஆமா...நீங்க யாரு? எந்த ஊர்?

நாராயணி : (கும்ரனின் தாய்) நாங்க விளியூர். சஞ்சீவி வைத்தியரை பார்க்கணும்னு வந்தோம். அவரு வீடு.....

ஜீவா :-சஞ்சீவி வைத்தியரா.....? அவரு வீட்டிலே தான் இருப்பாரு! இல்லேண்ணு விஷமூலிகை தயாரிக்கிற குடிசை ஒண்ணு இருக்கு! அங்கே இருந்தாலும் இருப்பாரு! எதுக்கும் கொஞ்சம் அப்படிப் போயி விசாரித்துப் பாருங்க.

கும :-வாருமுங்க! (ஜீவானந்தர் போய் விடுகிறார்.)

நாரா : ஏம்பா...அங்கே இப்படி பேசிப் பேசித்தானை இந்த ஊருக்கு வந்தோம். இங்கேயும் வந்தவங்க—போனை வங்க கிட்ட என் வம்பு பேசுறே?

கும :-வம்பு இல்லேம்மா...சிறு விளக்கம், மழைக்கும்—மாரிக்கும் உள்ள தொடர்பை பற்றி.....!

நாரா :-சரி...சரி...வா போகலாம்.

(கோவில் பூசை நடந்து முடிகிறது)

(பாட்டு)

எல்லோரும்

மாரி மகமாயி மாரி மகமாயி
ஆயி எங்கள் காளியம்மா
மாரி மகமாயி மாரி மகமாயி
ஏழை நாங்கள் எல்லோரும் வாழ
மாத மும்மாரி பொழியனும் தாயே.

ஆண்

சூரியனல் கடல் நீரும்—மேகமாகவே
மாறியதால் லோகத்திலே
மழையும் பொழியுமா...

பெண்

சொல்றேன் கேளு...
விஞ்ஞானம் புதிதாக மாறுது பாராய்
கொடும்பாவி அருளாலே பேயுமாம் ஜோராய்
மானம் சாஞ்சா நாமெல்லோரும் வாடிடுவோம்
தல்லாலே லா.....

எல்லோரும்

திரி சூலி நீஜி எங்கள் மாரி மகமாயி
வரி கொடுக்க முடியாமல்
வாடுறோம் தாயே...
ஓங்கார ரூபிணி மாரி மகமாயி
எங்கள் குறை தீர்த்து விடு
மாரி மகமாயி ... ... (மாரி)

காட்சி 2

இடம் :-சஞ்சீவி வைத்தியரின் குடிசை

நாரா :-குவிந்து கிடக்கும் செல்வத்தை ஒரு கொடியவன் அனுபவிக்க விட்டு விட்டு, நானும்—என் மகனும் கண் இருந்தும் குருடர்களாக அலைய வேண்டுமென்பது விதியா வைத்தியரே.....?

சஞ்சீவி :-வேதவல்லி.....

நாரா :-உஸ்.....குமரனுக்குத் தெரியாது.

சஞ் :-ஹூம்...நாராயணி...இன்றைய ஜமீன்தார் மலையப்பனுக்கு உண்மைத் தெரியாது! நீயும்...குமரனும் சில நாள் அங்கேயே வேலைக்கு அமரவேண்டும்.

நாரா :-வேலைக்கா?

சஞ் :-அப்படியானால்தான் நமது இலட்சியம் நிறைவேறும்! மறைந்து கிடக்கும் உயிலையும் நீ அங்கேயே கண்டு பிடிக்கவும் கூடும்! குமரனுக்கும் ஜமீன் பழக்க வழக்கங்கள் பாடமாகும்!

நாரா :-குமரனுக்கு பணக்கார வீடு என்றால் பிடிக்காது! அந்த ஊரிலே சீர்திருத்தம் பேசித்தான் உயிருக்கே ஆபத்து வந்து—இந்த ஊருக்கு வந்தோம்.

சஞ் :-இப்போது எல்லா சீர்திருத்தமும், கொள்கைகளும் பேசுவான்! பிறகு ஜமீன் கிடைத்து விட்டால் அந்த உல்லாசத்திலே அவற்றை எல்லாம் மறந்து விடுவான்! நாராயணி...நான் சொன்னது ஞாபகமிருக்கட்டும்!

நாராயணி :-குமரர்...குமரா...!

(குமரன் வருகிறான்)

கும :-என்னம்மா! இரகசியமெல்லாம் பேசி முடிந்ததா?

நாரா :-குமரா! நமக்கு ஜமீன்தார் வீட்டிலே வேலை கிடைக்கப் போகுதாம்!

கும :-வேலையா! ஜமீன்தார் வீட்டிலேயா?

நாரா : சொல்றதை சரின்னு கேட்கணும்!

(மூவரும் புறப்படுகின்றனர் ஜமீன்தார் மலையப்பரிடம்)

காட்சி 3

இடம் :-மலையப்பர் மாளிகை

மலை :-வா...சஞ்சீவி! ஹூம்...என்ன விசேஷம்.....

சஞ் :-ஜமீன்தாரை பார்த்து விட்டுப் போகலாம்னு வந்தேன்...சும்மா வருவேனா?

மலை :-இவுங்க யாரு?

சஞ் :-இவுங்க எனக்கு தெரிஞ்சவங்க! உங்க வீட்டிலே ஏதாவது வேலை கிடைக்குமான்னு.....

மலை :-ஹூம் எனக்கும் ஒரு வேலைக்காரி தேவை தான்! டேய் அண்ணாமலை! இவங்களை அம்மாகிட்டே அழைச்சிக்கிட்டுப்போ!

(வேலைக்காரன் கூட்டிச் செல்லுகிறான்)

மீனு :-ஹாம்.....அப்புறம்.....

(காட்சி மாறுகிறது)

ஞானம் : ஜமீன்தார் மனைவி) மீனு...மீனு...

மீனு :(மலையப்பரின் தங்கை) என்ன அண்ணி ?

ஞா :-நம்ம வீட்டுக்கு புதுவேலைக்காரி வந்திருக்காங்க.

[நாராயணியைப் பார்த்து]

நாராயணி ! வீட்டை ஒழுங்காக பார்த்துக்கொள். உன் வீடு மாதிரி.

நாரா :-சந்தோதகமா ? இனிமேல் இது என் வீடுதான் !

ஞா :-மீனு.....வேலைகளைச் சொல்.

(ஞானம் போன பிறகு)

மீ :-வாங்க ! வந்ததும் வராதுங்காட்டியும் உங்களுக்கு என்ன வேலை ?

நாரா : ஆமா...நீங்க ஜமீன்தாருக்கு என்ன வேணும் ?

மீனு :-தங்கை !

(நாட்கள் பல கடந்தன)

(குமரனின் தாய் தண்ணீர்க் குடம் தூக்கி வருகிறாள். குமரன் குறுக்கொடிய—வியர்வை சிந்த விறகு வெட்டுகிறான். இளைத்து உட்காருகிறான் - இட்லி வருகிறது—இன்பம் அடைகிறான். அடுத்து ஆரஞ்சுப்பழம் வருகிறது—ஆறுதல் பெறுகிறான். பாட்டாளி குமரனுக்கு பால் வருகிறது—பரவசம் அடைகிறான். இவ்வாறாக மீனு தனது காதலை சுவையுள்ள பொருள்கள் மூலம் குமரனுக்கு அறிவித்தாள். இறுதியாக இருவரும் சேர்ந்து அந்த அழகிய பூஞ்செடித் தொட்டியை புன்முறுவல் பூத்த முகத்துடன் தூக்கினார்கள்.)

(குமரன் பெட்டி வண்டியை இழுத்து வரும்போது தனது தாய் தண்ணீர்க் குடம் தூக்கி வருவதைக் கண்டு உதவிக்கு ஓடுகிறான்.)

நாரா : இதை நீ கண்ணுலேயா பார்க்கணும்?

ஞா :- அடியே நாராயணி! அங்கே என்னடி மகனுடை குலாவுறே? சீக்கிரம் வாடி!

மலை : டேய்...எங்கடா அந்த சோம்பேறி? இன்னுமா ஸ்டேஷன்லே இருந்து வர்றான்?

(குமரன் வண்டியை இழுத்து வருகிறான்—தண்ணீர் குடத்துடன்)

மலை :- தண்டச் சோறு! ஏண்டா தாமதம்? ஏதுடா குடம்?

கும :- அம்மா தண்ணீ கொண்டு வந்தாங்க...உதவியா

மலை :- சீ...! நீ இங்கே வேலை பார்க்கிற வரைக்கா வேலைக்காரன்—வேலைக்காரன்தான்! அம்மா...பிள்ளை பாசமெல்லாம் பேசினே...சோத்திலே மண்ணு விழுந்து விடும். ஜாக்கிரதை! வரும் பெட்டியை கொண்டுப்போயி அடுக்குடா...அடுக்குடான்னு

{ குமரனை மலையப்பன் வாட்டுகிறான்—ஒரு புறம்
நாராயணியை ஞானம் கண்டிக்கிறாள்—மதுபுறம் }

ஞா : வெட்கம் கெட்ட நாயே...அவ்வளவு அலட்சியம் என்னடி? ஒரு குடம் தூக்கிவர உடம்பு இடம் கொடுக்கலையோ பாவம் புது இலை...துவண்டு போச்சி.....

நாரா :- குடத்தை நான் உடைக்கலை...குடத்தை உருட்டி விட்டது.....

ஞா :- சீ...தப்பு பண்றது பண்ணிவிட்டு தவறை அவரு தலையிலா தூக்கிப் போட்றே?

(என்று நாராயணியை ஞானம் அடிக்கிறாள். நாராயணி மறு விநாடி மாடியிலிருந்து கீழே உருட்டி விடப்படுகிறாள்.

இதைக் கண்ட குமரன் பெட்டியை கீழே போட்டுவிட்டு ஓடு கிறான்)

கும :- அம்மா.....

நாரா :-எனக்கு ஒன்றும் இல்லே...நீ போயி வேலை யைப்பாரு !

மலை :-டேய்...அங்கே என்னடா கூத்தாடுறே...வாடா இங்கே...பெட்டியை திறடா...சீக்கிரம் திறடா...

(குமரன் பெட்டியை திறக்கிறான்)

மலை :-(கண்ணுடிச் சாமான்கள் உடைந்திருப்பதைக் கண்டு கடுஞ்சினம் கொண்டு) என்னடா இது? என்டா உடைச்சே?

கும :- அம்மா.....

மலை :-அம்மா . (ஆணவத்துடன்) நீ இங்கு அடிமை வேலைக்கு வந்தாய் ! அம்மா—மகன் என்ற பாசம் கூடா துன்னு எத்தனை தடவையடா சொல்றது?

(மலையப்பர் குமரனை சவுக்கால் அடிக்கிறார். நாராயணி தடுக்கிறாள், மலையப்பரின் கை சுளுக்கி விடுகிறது)

மலை : டேய் . போயி வைத்தியரை கூட்டிக் கிட்டு வாடா...போடா சீக்கிரம்.....

(குமரன் வைத்தியரிடம் போகிறான்.)

காட்சி 4

இடம் :-வைத்தியர் வீடு.

கும :-(கதவை தட்டிக்கொண்டே) வைத்தியரே... வைத்தியரே...

பிரேமா :-(வைத்தியரின் மகள் — கதவைத்திறந்து) வாங்க ! ஆ...இதென்ன அக்கிரமம்...

கும :-அப்பா இல்லே...

பிரே :-அய்யோ...இரத்தம் இரத்தமா தளிர்ச்சிருக்கே

கும : எங்களை புலியா மாத்துருங்க—இப்படி சிகப்பு கோடு போட்டு. அப்பா எங்கே...?

பிரே :-இதோ கூப்பிட்றேன் ஏ அப்போ...சீக்கிரம் வாங்கோ..."

(என்று குடிசையில் இருந்த தனது தந்தையை பிரேமா அழைக்கிறாள்)

[தங்கையன் வருகிறான்]

தங்கையன் :-வைத்தியர் இல்லே . ?

பிரே :-இல்லே.

தங் : கொஞ்சம் உடும்பு எண்ணெய் வேணும்.

பிரே :-இப்போ இல்லே.

தங் :-பணம் கொண்டு வந்திருக்கேன்.

பிரே :-அப்புறம் வாய்யா ! இப்போதான் வேலையா இருக்கே.

(தங்கையன் போன பிறகு)

கும :-என்...பிரேமா . அதை கொடுத்தனுப்புறதானே

பிரே :-பேர்ணப் போறான்...அப்புறம் வருவான். இதை விட அது ஒண்ணும் முக்கியம் இல்லே...

(வைத்தியர் வருகிறார்)

சந் :-என்...பிரேமா...யார் குமரன் ?

பிரே :-இந்தக் கொடுமையை பாருங்கப்பா—அந்த சண்டாளன் சவுக்காலே அடிச்சிருக்கான்.

சந் :-என்ன குமரா இது ?

கும :-இது என் எஜமான் கொடுத்த முத்தங்கள்.

சஞ் :-என் பிரேமா.....அந்தத் தலைவலிக்கார தங்கை யன் உடும்பு எண்ணெய் கேட்டாளுமே.....என் கொடுத் தனுப்புலே?

பிரே :- அது இல்லேப்பா !

சஞ் :-சும்மா கெட ! டேய் மாத்திரை ! அவன் கோபிச் சிக்கிட்டுப் போருன். இதைக் கொடுத்திட்டு பணத்தை வாங்கிட்டு வா.

மாத் :-(வைத்தியரது வேலைக்காரன்) இப்போ எதுங்க முக்கியம்? அவன் கோபிக்கக் கூடாதுங்குறதா? பணமா?

சஞ் :-சீ.....கொண்டு போயி கொடுத்திட்டு வாடா.

(மாத்திரை போகிருன்)

பிரே :-சரி.....இவரைக் கவனிங்கப்பா !

சஞ் : குமரா...நல்ல வேளை...உடனே வந்தாய்...இல் லேன்னு சீர் கெட்டிடும்.

கும :-நான்..... எனக்காக வரவில்லே ! என்னை அடிச் சதிலே ஜமீன்தார் கை சுளுக்கிடுச்சி...அதுக்காக உங்களே கூட்டிட்டுப் போக வந்தேன்.

பிரே :-கடவுள் கூலி கொடுக்கமலா விடுவாரு?

கும :-கொடுப்பாரு.....கொடுப்பாரு !.....

சஞ் :-பிரேமா...இந்தா...இந்த மருந்தைப் போடு ! நான் போயி அந்த கொம்பேறி மூக்கனை பார்த்துட்டு வர்றேன்.

காட்சி 5

இடம் :-மலையப்பர் மாளிகை

மலை :-என்ன சஞ்சீவி.....வர...வர நம்ம வீட்டுக்கு அதிகமாக வர்றதில்லே .....

சஞ் :-வராமல் என்ன...வைத்தியர்கள் அடிக்கடி வீட்டுக்கு வாக்கூடிய நிலைமை கூடாது என்பது தான்.

மலை :-நம்ம வீட்டுக்கு வியாதி பார்க்கத்தானே வரணும் ? விருந்து சாப்பிடவும் வரலாம் சஞ்சீவி !

சஞ் :-வரலாம்...நாங்கள் சாப்பிட்றதும்.....

மலை :-ஆ.....

சஞ் :-நாங்க சாப்பிட்றதும் ஒங்க சாப்பாடு தானே.

மலை :-சஞ்சீவி ! நீ ரொம்பவும் நன்றி உள்ளவன்தான். ஆனால்...அந்த ஒரு விஷயத்தில் தான் உன்னை நம்ப முடிய வில்லை.

சஞ் :-எதில்...? வைத்தியத்திலா ?

மலை :-ஊ...ஹூம்...அதில்தான் நீ அசகாய சூரனுச்சே! அந்த உயிலை மட்டும் என்னிடம் கொடுத்து விடு. என் கவலை தீர்ந்து விடும்.

சஞ் :-கவலைப்படாதிங்க ! உயில் இருந்தால் அல்லவா கொடுப்பதற்கு ?

மலை :-பிறகு யாரிடம் இருக்கிறது ?

சஞ் :-அது...ரொம்பவும் இரகசியமாக இருக்கு ! சந்தேகப் படாதீர்கள் ! சஞ்சலமே தேவை இல்லை ! சஞ்சீவியை நம்புங்கோ.....!

மலை :-டேய்..எங்கடா குமரன் ? மாடு மேய்க்க ,போயிட்டானா ?

காட்சி 6

இடம் :-வைத்தியர் வீடு

கும :-என்ன பிரேமா தேடுறே ?

பிரே :-அப்பா ஒரு நல்ல மருந்து இருக்குன்னு சொன்னாரு ! வலி, காயத்துக்கெல்லாம் போட்டால் உடனே சுகம் ஆகி விடுமாம். அதைத் தான் தேடுறேன்.

கும :-வேண்டாம் பிரேமா...இருக்கிற மருந்தைப்போடு! நீ ஏன் கஷ்டப்படுகிறாய் ?

பிரே :-உங்களுக்காக எவ்வளவு கஷ்டப்பட்டாலும் பரவாயில்லை.....

கும :-இந்த அன்பு உள்ளம் உலகத்திலே எல்லோருக்கும் இருந்தால்.....

பிரே :-எப்படி இருக்கும் ? எல்லோரும் பிரேமா வாகவர் இருக்க முடியும் ? அழகான பூஞ்செடியைப் பற்றி தோட்டக்காரன் தானே கவலைப்படுவான். ஆடுமாடுகளா கவலைப்படும் ?

கும :- நல்ல வேளை...ஞாபகப்படுத்தினாய்...மறந்தே போய் விட்டேன். மாட்டை ஓட்டிக் கிட்டுப் போகணும். இல்லாட்டா அந்த ஜமீன்தாரு கத்துவாரு ! நான் வர்றேன்.

பிரே :-ஏன்...இப்படி...கொஞ்சம் கூட ஓய்வு வேண்டாமா ?

கும :-நீ ஒரு பைத்தியம் ! ஏழைகளின் ஓய்வுக்கு இந்த உலகத்திலே சோம்பேறி என்று அர்த்தம்.

(குமரன் போகிறான். எதிரே மாத்திரை வருகிறான்.)

மாத் :-"ஓரிடந்தனிலே...நிலையில்லா துலகினிலே... உருண்டோடிடும்...ப....."

கும :-என்ன மாத்திரை ?

மாத் :-ஓட ஓட துரத்தி அந்த உடும்பு எண்ணெயை அவன் தலையிலேயே கட்டிட்டு வந்துட்டேன்.

கும :- அய்யோ...பாவம்.....

மாத் : நான் ஓடினது ஒண்ணும் பாவம் இல்லே...ஒரு ரூபாய் கொடுத்து அந்த எண்ணெயை வாங்கிட்டுப் போனேன்...அது தான் பாவம்.

பிரே : ஏய்...மாத்திரை !

மாத் :-அய்யய்யோ...நாய்க்குட்டி செத்துடும்.

(குமரன் போன திசையை நோக்கி பிரேமா நிற்கிறாள்)

காட்சி 7

(அரசகர் வருகின்றனர் ஒரு ஆட்டை பிடித்துக் கொண்டு, அதில் மாத்திரையும் ஒருவன்.)

கும :-ஆமா...இந்த ஆட்டுக்கு மாலை போட்டு எங்கே கொண்டு போறீங்க?

மாத் :-மாலை போட்ட ஆட்டை எங்கப்பா கொண்டு போவாங்க? மாட சாமிக்கு பலி கொடுக்கத்தான்.

கும : மாத்திரை! நீயுமா கூடபோறே?

மாத் :-என்ன பண்றது? ஊரோடே வாழணுமே! காணும் போயித்தொலையிறன்.

கும :-ஐய்யா...கடவுள் பெயரைச் சொல்லி இந்த வாய் இல்லாத ஜீவனை கொல்லப் போறீங்களே.....

ஒருவன்:-ஏம்பா ... அப்போ ... நீ கடவுளை இல்லேங் கிறியா?

கும :-கடவுளை நான் இல்லேங்கலே...கடவுள்.....

[பாட்டு]

1. ஆயிரம் தெய்வங்கள் உண்டென்று தேடி
அலையும் அறிவிலிகாள்—பல்
லாயிரம் வேதம் அறிவொன்றே தெய்வம
எனக் கேளீரோ

2. மாடனைக் காடனை வேடனைப் போற்றி
மயங்கு மதியிலிகாள் - எத
னாடுநின்றேங்கும் அறிவொன்றே தெய்வமென்
றோதியறியீரோ

3. மெள்ளப் பலதெய்வம் கூட்டி வளர்த்து
வெறுங்கதைகள் சேர்த்துப்—பல
கள்ள மதங்கள் பரப்புதற் கோர்மறை
காட்டவும் வல்லீரோ.

(உடனே ஆட்டை அவிழ்த்து விரட்டி விடுகிறார்கள்.)

காட்சி 8.

இரவு நேரம் குமரன் தூங்கிக் கொண்டிருக்கும்போது மீனு யாருக்கும் தெரியாமல் குமரனை சந்தித்துப் பேச வருகிறாள். நாயின் பாதுகாப்பிலே காதலி காதலனை கண்டு பேசுவதில் என்ன தவறு இருக்கிறது?

(இருவரும் தனிமையில்)

கும :-மீனு.....

மீனு :-குமரன்.....

கும :-அண்ணன் தூங்கியாச்சா?

மீனு :-தூங்கியாச்சி! ஆமா...நாளைக்கு வரி வசூலுக்கா போறீங்க?

கும :-உனக்குத் தெரியாதா? நாளைக்கு ஒங்க அண்ணன் வரி வசூலுக்குப் போறாரு! இந்த அக்கிரமத்தைப் பார் மீனு...பருவ மழை இல்லாமல் பட்டினிப் பஞ்சம் தலை விரித்தாடுது...ஒங்க அண்ணன் வரி வசூலுக்குப் போறாராம்—வரி வசூலுக்கு.

மீனு :-நீங்கள் இப்படி யெல்லாம் பேசுறது அண்ணனுக்குத் தெரிஞ்சுதான் ஆத்திரப் படறாரு!

கும :—நாளைக்கு நீ என்னுடன் வந்து பார்—அந்த வயிற்றெரிச்சல் உனக்கும் தெரியும். வரி கொடுக்க வழி இல்லை என்பான்—அவனை கை வலி எடுக்கும் வரை அடிப்பான் உன் அண்ணன். ஒளி இழந்த கண்கள்-உலர்ந்த உதடுகள்-ஒட்டிய வயிறு...இவைகள் அந்த ஓட்டைக் குடிசையிலே. விம்மலும், விக்கலும் அந்த விதியற்றவருக்கு—விசார குரல் வீணையின் நாதமாக இருக்கும் இந்த விதியற்றவருக்கு. பசியால் பதறுவான் பஞ்சை—பால் இல்லாக் குழந்தை வீறிட்டழும்...கருணை இழந்த நெஞ்சம், கண் இழந்த தன்மை, கண்ணிய மற்ற செயல் இவைகள் உன் தமையனின் தர்பாரிலே.....முகாரியை மோகனம் என்பான், ஒப்பாரியை ஓய்யார கீதம் என்பான்...மீனு...நீ அடிக்கடி

சொல்வாயே..." கடவுள் காப்பாற்றுவார்" என்று...— அதைத்தான் அந்த கதியற்றவர்களும் ஆயிரம் முறை சொல்லிக் கதறுவர்...அடிப்பான்...அவர்களது உடலிலே இரத்தம் சொட்டும் வரை...அய்யோ என்ற அழுகுரல்... அடுக்குமா இந்த செயல்...? சுழலும் சாட்டைக்கு முன்னே சுருண்டு போவார்கள்...இவற்றுக்கிடையே உன் அண்ணனின் அதிகாரத் தேர் நாளை பாட்டாளி மக்களின் தெருவிலே பவனி வரப்போகிறது...வந்துபார்...வந்துபார்... பார...பார.....

மலை :-டேய்...அங்கே என்னடா சப்தம்?

(மீனு ஓடி மறைகிறாள்).

(மலையப்பர் போன பிறகு)

மீனு :-வைக்கோல் போருக்கு முன்னே பட்டாசை கொளுத்துறீங்க.

கும :-பட்டாசா இது? மீனு.....

மீனு :-போதும்...போதும்... மறுபடியும் ஆரம்பிச்சிடாதிங்க.

குமரன் : பேசும் யாழே பெண் மானே
வீசும் தென்றல் நீ தானே.

மீனு : நீல வானே தன்னை மறந்து
நிலவினைப் புகழ்ந்திடலாமோ.

குமரன்: எழிலே! தமிழ்க் காவியமே
எழுதாத ஓவியமே—

மீனு : இன்ப மொழி பேசி பேசி
அன்புப் பார்வை வீசி வீசி.

குமரன்: பேசும் யாழே பெண் மானே—

மீனு : யாழே நானென்றுல் நாதம் நீர்தானே

குமரன்: நாதத்தில் பேதம் உண்டு
நமக்கது வேண்டாமே.

இருவர்: காதல் வாழ்வே கனி ரசமே
மாதர் மறவர் உல்லாசமே.

காட்சி 9.

[மலையப்பர் வரி வசூலுக்கு புறப்படுகிறார்]

இடம் :-ரோடு

மலை :-என்னடா ?

குமு :-அது எழுந்திருக்கா துங்க.

மலை :-அப்புறம்...? என்னை நடந்து போகச்சொல்றியா ? ஒரு பக்கத்தை நீ பிடிச்சி இழுடா.

(குமரன் மாட்டுக்குப் பதில் தானே வண்டியை இழுத்துச் செல்லுகிறான்).

இடம் :-மாளிகை வாசல்

மலை :-டேய் ! மாடு ரொம்ப களைச்சிருக்கும் ! போயி தண்ணி காட்டு ! தண்ணி காட்டிட்டு அந்த மொண்டி மாடை டப் போயி கூட்டிக்கிட்டுவா. என்னை.....

(மாடியில் நின்று இதைக் கண்ட நாராயணி மயக்கம் அடைகிறாள்).

குமு :-போதும் கஷ்டம், இனி பொறுக்க முடியாது.

(குமரன் மாடிக்கு ஓடுகிறான்—மயக்கமடைந்த தாயைக் கர்ணை.)

குமு :-(அன்பு அன்னையை அணைத்து) அம்மா...என்னம்மா செய்யுது ?

நாரா :-இந்தப்பாழும் கண்கள் இன்னும் ஏன் இருக்கிறது ? வாழ்க்கை வண்டியிலே நீயும்—என் மருமகளும் பூட்டப்பட்டு அந்தச் சோபிதத்தை சுவைக்க வேண்டுமென்று கனவு கண்டேனடா ! கனவு மறைந்து காளை மாடும்—என் மகனும் வண்டியை இழுப்பார்கள் என்று இந்தக் காதகியின் நெஞ்சம் நினைக்கக்கூட இல்லை.

குமு :-அம்மா...இப்போதே அனுமதி கொடுங்கள்—வெளியேறி விடுவோம்.

நாரா :-வேண்டாம்டா கண்ணு...உன்னைவிட கொஞ்சம் போனதுதான் என்னுடைய இரத்தமும். ஆனால்... அந்த ஒரு விஷயத்துக்காகத்தான் இன்னும் உயிருடன் இருக்கிறேன்.

கும :-அடிக்கடி சொல்கிறீர்களே...என்னம்மா அந்த இரகசியம்?

நாரா :-உன்னைச் சீமாறுக்கும் இரகசியம் மலையப்பனிடம் சிக்கி இருக்கிறது.

[ஞானம் ஒட்டுக் கேட்கிறாள்.]

(காட்சி மாறுகிறது)

மலை :-விஷயத்தைச் சொல்.

ஞா :-என்னத்தை சொல்றது? கழுத்துக்கு கத்தி வைக்க காத்திருக்காங்க—தாயும்—பிள்ளையும்.

மலையப் :-விபரமாகச் சொல் ஞானம்!

ஞா :-உங்களை குமரன் கொல்லுவதற்கு கொக்கரிக்கிறான். அவனை சீமாறுக்கும் இரகசியம் உங்களிடம் சிக்கி இருக்கிறதாம்! இதை நாராயணி குமரனிடம் சொல்வதை இந்தக் காதாலே கேட்டேன்.

மலையப் :-இரகசியம்...இரகசியம் அந்த உயில்தான்... ஞானம்! இவள் நாராயணி அல்ல—வேலைக்காரி வேஷத் திலே வேதவல்லி! விடக்கூடாது இவர்களை—விபரீதம் ஏற்பட்டு விடும்.

(இருவரும் தனிமையில்)

ஞா :-இப்படி என்னையும் மறந்து கவலைப்படுவீர்கள் என்று தெரிந்திருந்தால் சொல்லி இருக்கவே மாட்டேன்.

மலையப் :-பொறு ஞானம்! இவர்களை விடக்கூடாது! ஞானம் இதோ பார்!

(என்று கூறி விஷ புட்டியைக் காட்டுகிறான்)

ஞா :-பாய்சன்!

மலையப் :-விஷம் என்னிடம் — விவேகம் உன்னிடம் அந்தப் பிச்சைக்கார குமரனை பிணமாக்கவேண்டும். ஜாக்கிரதை! சதி செய்வது ஒரு ஜாலவித்தை! அதற்கு நீதான் சரியானவள்! இன்று அவசரமாக நான் வெளியூர் போகிறேன். இரவு திரும்பிவருவதற்குள் அந்த நாயின் சவத்திலே தீ பரவ வேண்டும்.

காட்சி-10.

(குமரன் மாட்டுக்கு வைக்கோல் போட்டுக்கொண்டிருக்கிறான். மீனு மறைந்து வந்து வைக்கோலை தூக்கிச் செல்லுகிறாள். குமரன் பிடித்துக் கொள்ளுகிறான்)

கும :-அட...நீதானு...? மாடுல்லே வைக்கோலை திங்குதுன்னு பார்த்தேன்.

மீனு :-போங்க குமரன்.

கும :-ஆமா...இன்னிக்கு என்ன முன்னுடியே வந்துட்டே?

மீனு :-அண்ணன் ஊரில் இல்லே.

கும :-அண்ணி?

மீனு :-அந்தப் பிசாசு தூங்கி இருக்கும்.

கும :-ஆமா...இப்படி வர்றியே...யாராவது பார்த்தால் என்ன ஆகிறது?

மீனு :-யாரைப்பற்றியும் கவலை இல்லை! எனக்கு வேண்டியது உங்கள் அழியாத அன்புதான்.

(என்று சொல்லி—துள்ளிக்குதித்து பால் கொண்டு வரப்போகிறாள். அங்கே ஞானம் பாலில் விஷத்தை கலந்து வைத்திருக்கிறாள்.)

கும :-ஆமா...ஒரு நாளைக்கு பால் இல்லேன்னு என்ன? ஏன் இப்படி அவசரமாக ஓடணும்?

மீனு :-எனக்கு ஒண்ணும் கஷ்டம் இல்லே.

கும :-ஹ்ரூம்... எல்லா ஏழைகளுக்கும் இப்படி பாலா கிடைக்குது?

மீனு :-எல்லோருக்கும் இப்படி ஒரு மீனுவா கிடைக்கிறுள்? குடிங்கன்னு...

குமரன் :-முதல்லே நீகுடி.

மீனு :-நீங்கதான்.

கும :-முடியாது...நீதான்.

(அப்பொழுது நாராயணி வருதல்)

கும :-அம்மா...

(மீனு ஓடி மறைகிறுள்)

ஏங்கம்மா?

நாரா :-படுத்திட்டியான்னு பார்க்கவந்தேன். இன்னுமா ஆங்கலே?

கும :-பால் குடிங்கம்மா...

நாரா :-பால்ஏதுடா கண்ணு?

கும :-குடிங்கம்மா...அதை இன்னெரு நாளைக்கு சொல்றேன்.

நாரா :-கண்ணே...நீ குடி.

குமரன் :-ஒங்க பாலிலே வளர்ந்தவன்—இந்தப்பாலிலே யாவது பாசத்தை பார்க்கக்கூடாதா?

நாரா :-என் கண்ணே...பாலிலா இருக்கிறது பாசம்? உன் பார்வையிலே இருக்கிறது வற்றுத பாசம்.

கும :-குடிங்கம்மா.

(நாராயணி பாலை குடித்தல்)

நாரா :-இனிமேல் நீ குடி.

கும :-இன்னும் கொஞ்சம்!

(விஷம் கலந்த பாலைக்குடித்த நாராயணி கீழே சாய்கிறாள். குமரன் அதிர்ச்சி அடைகிறான்)

குமரன் :- அம்மா...

நாரா :-குமரா...ஏதோ சதி நடந்திருக்கிறது. அதில் குறி வைக்கப்பட்டவன் நீ—கொலை செய்யப்பட்டவள் நான், தம்பி! பல நாளாக மறைத்து வைத்திருந்த பரம இரகசியத்தை இன்று வெளியிடப்போகிறேன்.

(காட்சி மாறுகிறது)

மலையப் :-ஞானம்!

ஞா :-வெற்றி !வந்து பாருங்களேன்...விபரத்தை பிறகு சொல்லுகிறேன்.

(இக்கோரக் காட்சியைக்கண்டு மட்டாக மலையப்பன் மகிழ்ச்சி அடைகிறான்—மமதையுடன்)

(காட்சி மாற்றம்)

கும :-அப்படியானால் இந்த மலையப்பர் யார்?

நாரா :-உன் அப்பாவின் தூர பந்து! மலேயாவில் இருந்து வந்தவன். சூழ்ச்சியால் நம் சொத்தை கவர்ந்தவன். குமரா...எப்படியாவது அந்த உயிலை கண்டுபிடித்து விடு.

கும :-அம்மா...அம்மா...

மலையப் :-டேய்...குமரா...அங்கே என்னடா சப்தம்?

குமரன் :-அம்மா...

மலையப் :-காலராவா? ஜன்னியா? தூக்கிட்டுப்போடா எங்கேயாச்சிலும்.

(மீனு வருகிறாள்)

மீனு :-குமரன்...இதென்ன விபரீதம்...

கும :-(கோபத்துடன்) சீ...தொடாதே என் தாயை! பால் கொண்டு வருகிறேன் என்று அவசர அவசரமாக ஓடினையே...இப்போது தெரிகிறது எதற்கு என்று.

மீனு :-குமரன்...என்னை நம்புங்கள்.

கும :-முதலில் நீங்கள் குடியுங்கள் என்று கொஞ்சினையே...அப்போது தெரியாதடி—நீ நஞ்சை கொண்டு வந்திருப்பாய் என்று...

மீனு :-குமரன்...நான் கொடுத்ததில் தவறு ஒன்றும் இல்லை.

கும :-நீ சரியாகத்தான் கொடுத்தாய்...நான்தான் தவறி என் தாயாரிடம் கொடுத்து விட்டேன்.

மீனு :-குமரன்...இவ்வளவு நாள் பழகியும் இன்னும் என்னை புரிந்து கொள்ளவில்லையா?

கும :-புரிந்து கொண்டேனடி புரிந்து கொண்டேன். ஏழையின் இரத்தத்திலே நீச்சல் அடிப்பவன்—உன் அண்ணன்! அதிலே ஜலக்ரீடை செய்பவள் தங்கை. பாட்டாளியின் எலும்பை சிலம்பாகச் செய்பவன்—உன் அண்ணன்! அதை அணிந்து கொண்டு நாட்டியம் ஆடுபவள்—தங்கை! இவளிடம் எனக்கு அன்பு, பாசம், காதல்...

(என்று குமரன் மீனுவை உதறித் தள்ளுகிறான்.

மீனு போய் விடுகிறாள்.)

குமரன் தனது தாயுடன் வைத்தியரிடம் போகிறான்.

காட்சி 11

மலையப் :-மீனு...! அண்ணனுக்கு கௌரவம் தேடி இருப்பது சொம்பவும் அழகாக இருக்கிறது.

ஞா :-கௌரவம் தேட்றது அப்புறம் இருக்கட்டும். கேவலமாவது தேடாமல் இருக்கக் கூடாதா?

மலையப் :-மீனு...என் தன்மான தத்தைக் காப்பாற்ற தங்கை என்றும் பார்க்கமாட்டேன், ஜாக்கிரதை!

காட்சி 12

இடம் :-வைத்தியர் குடிசை.

கும :-வைத்தியரே...சீக்கிரம் வாங்க வைத்தியரே...

சஞ்சீவி :-என்ன குமரா ? யாரு !நாராயணியா...

(வைத்தியர் நாராயணியின் கையைப் பிடித்து பார்க்கிறார்)

கும :-என்ன வைத்தியரே.

சஞ் :-(மௌனம்)

கும :-அம்மா...

(தரையிலே கிடந்த கோழியும் உயிரை இழந்தது.)

(பாவம்...)

காட்சி 13

இடம் :-நாராயணியின் கல்லறை.

ஜீவானந் :-குமரா...

கும :-வாருங்கள்...உங்களை உட்காரச்சொல்லி உபசரிப்பதற்கு எனக்கு ஒரு இடம் கிடையாது. என் தாய்க்கு நான் கட்டிக் கொடுத்திருக்கும் வீடு, உட்காருங்கள்.

ஜீவானந் :-குமரா...வருந்திஞல் செத்தவர்கள் வந்து விடுவார்களா ?

கும :-எனக்கும் தெரியும். ஆனல் அவர்கள் விட்டுப் போன வேலையை எப்படி நிறை வேற்றுவது ?

ஜீவானந் :-ரொம்பவும் கலங்கி இருக்கிறாய்.

கும :-கலங்கவில்லை ! கடும்சபதம் எடுத்திருக்கிறேன். நான் ஒரு பணக்காரன்...நான் ஒரு ஜமீன்தார்...

ஜீவானந் :-என்ன பணக்காரனு ?

கும :-பயப்படவேண்டாம் ! நான ஒரு பணக்காரன் தான்! ஆனல்... எல்லாபணக்காரர்களும்கெட்டவர்களாக இருந்து விடமாட்டார்கள். என் தாயைக் கொன்றது யார் தெரியுமா? வைத்தியர்கள் கூறும் வியாதியுமல்ல...வேதாந்திகள் கூறும் விதியு மல்ல...கொடியவர்களின் கூடாரத்திலே தரப்பட்ட விஷம்...என் தாயைக் கொன்றது.

ஜீவானந்:...விஷமா !

கும :-ஆம். விஷம்தான்...சாந்தம்...சாந்தம் என்று போதித்து வந்த என் தாயை சமாதியாக்கிவிட்டது. அந்தச் சமாதியிலே மலையப்பனின் இரத்தம் மழையெனப் பொழியவேண்டும் ! அந்த மதான்மத்த வம்சத்தின் கண்களைப் பிடுங்கி மலர்களாகத் தூவவேண்டும். அம்மா...உங்களுக்கு அளித்த உறுதியை நிறைவேற்றும் வரை ஓயமாட்டான் குமரன் ! துடிக்கும் என் கரங்களுக்கு பதில் சொல்லித்தான் ஆகவேண்டும் ! அந்தத் துரோகியை கொல்லாமல் விடமாட்டேன் ! பழிக்குப் பழி...!

(பழி வாங்க முடிவு செய்தான். பலரிடமும் விசாரித்தான் உயிலை...)

கும :-பெரியவரே...சாதகமான பதில் கிடையாதா ?

பெரியவர் :-உயில் விஷயமாக எனக்கு ஒண்ணும் தெரியாது.

மற்றொருவர் :-உயிலாவது மண்ணாங்கட்டியாவது.

கும :-அப்படி ஒரு உயிலையாவது கேள்விப்பட்டதில்லையா ?

மற்றொரு :-கேள்வி தான்.

கும :-என்னங்க கேள்வி ?

மற்றொரு :-அட, யாருங்காணும் சுத்தப் பைத்தியக்காரனு இருக்கே...ஆட்டத்திலே கேள்வின்னு...

(குமரன் அலைந்தான்,.எங்குமே "பைத்தியம்" என்ற எதிரொலி.)

கும :-(கல்லறைக்கருகே) அம்மா...நான் பைத்தியக்கார னும்மா...நான் பைத்தியமாம்மா...?

சஞ்சீவி :-பைத்தியம் என்றுதான் சொல்லுவார்கள்! குமரா! நானே உன் புது வாலாற்றை நம்ப முடியவில்லை மற்றவர்கள் எப்படி நம்புவார்கள்?

குமரன் :-ஆ...அப்படி ஒரு உயில் எழுதப்பட்டதாவது உங்களுக்குத் தெரியாதா?

சஞ்சீவி :-உயில் எழுதப்பட்டது தெரியும். விண்ணிலே கட்சத்திரங்கள் விழுவதை பார்க்கமுடியும்! ஆனல், அது எங்கே விழுந்தது என்று கண்டு பிடிப்பதுதானே கஷ்டம்.

கும :-எங்கே இருந்தாலும் சரி! இடத்தை மட்டும் சொல்லுங்கள்.

சஞ்சீவி :-பளிங்கு மண்டபத்திலே பார்வைக்கா வைத் திருப்பார்கள்! அது எந்த பாம்புக் காட்டுக்குள் பதுங்கி இருக்கிறதோ...

குமரன் :-பாம்புக்காடு—பாதாளச் சுரங்கம்! இடத்தை மட்டும் சொல்லுங்கள் வைத்தியரே.

சஞ்சீவி :-உயில் ஒரு வாள்! அதை சட்டம் என்னும் சாணைக்கல்லிலே தீட்டவேண்டும். பிறகுதான் நீ நீதி மன் றம் என்னும் போர்க்களத்திலே மலையப்பனை சந்திக்க முடி யும். இந்தச் சாணைக்கல்லை வாங்க சாதாரண மானவர்க ளால் முடியாது! ஏராளமான சம்பத்துகள் தேவை! இந்த யோசனை சொல்வதால் உயில் இருக்கும் இடம் எனக்குத் தெரியும் என்று யூகித்து விடாதே.

குமரன் :-வைத்தியரே...ஏமாற்றம்தான் பதிலா?

சஞ்சீவி :-ஏமாற்றத்தையும் ஏணிப்படியாக்கிக் கொள் வார்கள், இங்கிதம் தெரிந்தவர்கள். வழக்கு நடத்த பணம் தேவை! பிறகு உயிலைத் தேடு.

(குமரன் போய் விடுகிறான்)

(பிரேமா வருகிறாள்.)

என் பிரேமா...இவ்வளவு நேரம்?

பிரேமா :-வழியிலெ லக்ஷிமி வந்தாப்பா...ஆமா...குமரன் ஏதோ உயில் உயில்னு அலையிராராமே...அது என்னப்பா?

சஞ்சீவி :-சீக்கிரம் கொண்டுவா...பசிக்கிறது.

(உணவுடன் உள்ளே போகிறாள்.)

வேண்டாம்! இங்கே கொண்டுவா. (சாப்பிட்டுக் கொண்டே) ஜமீன் சொத்துக்கு அவன் அதிபதி! இறந்து போன ஜமீன்தார் மகன் குமரன். சொந்த மனைவி கிடையாது! ஆசை நாயகியின் மகன்! சொத்துக்கள் எல்லாம் குமரனுக்கு எழுதப்பட்டுவிட்டன. அந்த உயிலுக்குத் தான் ஆதாரம் தேடுகிறான்.

பிரேமா :-ஆதாரமா...(தனக்குள்) ஜமீன்தாரின் மகனை?

சஞ்சீவி :-ஆம்...இறந்த ஜமீன்தாருக்கு சிகிச்சை செய்தான் ஒரு வைத்தியன். அவன் மறைத்து விட்டான் அந்த உயிலை.

பிரேமா :-என்னப்பா சொல்லுகிறீர்கள்? யார் அந்தக் கொடியவன்?

சஞ்சீவி :-கொடியவன் அல்ல! மகனை ஜமீன்தாரணியாக்க வேண்டுமென்று பேராசைப்பட்டவன்.

பிரேமா :-யார் அந்தப் பேராசைக்காரன்?

சஞ்சீவி :-பிரேமாவின் தகப்பன்.

பிரேமா :-ஆ...நீங்களா! இதை அவரிடம் சொல்லிவிட்டீர்களா?

சஞ்சீவி :-அசட்டுப் பெண்ணே! அவசரப்பட்டு விடாதே! குமரன் மீது நீ கொண்டுள்ள காதலை என் அனுமதிக்கிறேன் தெரியுமா? அவன் உன்னை எழை என்றும் பாராமல் திருமணம் செய்து கொள்ளவேண்டும். பிறகு வழக்கு-அப்புறம் குமரன் ஜமீன்தார்! நீ ஜமீன்தாரணி!!

பிரேமா :-ஆ...! என் குமரன் ஜமீன்தார்! என் காதலன் ஜமீன்தார்!!!

காட்சி 14

(குமரன் சென்னையிலே கூலிக்காரனாக)

பீமசேனன் :-டேய் தம்பி! இங்கே வா! இந்தப் பெட்டியை தூக்கிட்டு வர்றியா?

குமரன் :-ஓ—

பீமசேனன் :-தூக்கு...தலையிலே...

[கந்தசாமி வீடு]

கந்தசாமி :-ஹல்லோ...இப்போதான் வர்றீங்களா?

பீமசேனன் :-ஆமா...டேய்...பெட்டி படுக்கையைக் கொண்டு உள்ளே வை ஹாம்...அவன் சத்திய சீலன் வந்தாச்சா?

கந்தசாமி :-வந்தாச்சி.

பீமசேனன் :-வர்ற வழியிலே பார்த்துக்கிட்டேதான வந்தேன். விளம்பரம் ரொம்ப தடபுடல்.

கந்தசாமி:-மிஸ்டர் பீமசேனன்! நான் ஒரு காண்டிராக்ட் காரன்! பணத்தை மிச்சம் பண்ணனுங்குற அபிப்பிராயமே எனக்கு கிடையாது. (ஆரஞ்சுப்பழம் வைக்கப்படுகிறது) சாப்பிடுங்க!

பீமசேனன் :-பரவாயில்லே...நீங்க கந்தசாமின்னு கந்தசாமிதான்.

குமரன் :-அய்யா...அய்யா...

கந்தசாமி :-யாரது?

குமரன் :-மூட்டை தூக்கிட்டு வந்தவன்.

பீமசேனன் :-ஓ...ஹோ...மறந்துட்டேன். இந்தா ஒரு அணை.

குமரன் :-ஒரு அணை!

பீமசேனன் :-பின்னே எவ்வளவுடா?

குமரன் :-ஏதோ பார்த்துக் கொடுங்க.

பீமசேனன் :-இந்தப் பயல்கிட்டே முதல்லே பேசிக் கிடாதுதே தவறு! டேய்...மரியாதையா போயிரு.

குமரன் :-எவ்வளவு தூரம் தூக்கிட்டு வந்தேன்.

பீமசேனன் :-எதுத்து வேறையா பேசுறே? டேய்... போறியா? உதை வேணுமா?

குமரன் :-கூலி கேட்டா உதையா!

கந்தசாமி :-டேய்...கொடுக்கிறதை வாங்கிட்டுப்போடா.

குமரன் :-எதை...உதையையா?

பீமசேனன் :-டேய்...இப்போ போறியா இல்லையா?

குமரன் :-சிலருக்கு பணக் கொழுப்பு, சிலருக்கு சதைக் கொழுப்பு.

பீமசேனன் :-டேய்...என்ன சொன்னே? என்னடா சொன்னே...கந்தசாமி தடுக்கிறான்.

(குமரனுக்கும், பீமசேனனுக்கும் சண்டை மூளுகிறது)

கந்தசாமி :-மிஸ்டர் பீமசேனன்! நீங்க இப்படியே குத்துச் சண்டை போட ஆரம்பிச்சுட்டா ஜனங்கள் டிக்கட் இல்லாமல் பார்த்துட்டுப் போயிடு வாங்க. எனக்கு வசூல் வசூல் தான்.

பீமசேனன் : விடுங்க மிஸ்டர் கந்தசாமி! இந்தப் பசங்க கிளை சும்மா விடக்கூடாது.

(குமரன் ஜெயித்து விடுகிறான்)

கந்தசாமி :-மிஸ்டர் பீமசேனன்! ரொம்பவும் டயடா இருக்கீங்க—போயி இளைப்பாருங்க—நான் இதோ வர்றேன்.

பீமசேனன் :-பரவாயில்லே...என் கையை வேறேலே சுழட்டிக் கிட்டான்.

(கூலியாக வந்த குமரன் குத்துச்சண்டை வீரனாக மாறுகிறான்.

காட்சி 15

(குமரன் குத்துச்சண்டை வீரனாக மாறிய செய்தி கிராமம் பூராவும் பரவி மாத்திரைக்கு தெரிந்து—இறுதியாக மலையப்பனுக்கும் தெரிகிறது.

மலையப்பர் :-சபாஷ்! குத்துச்சண்டை கோவிந்தன் கோரமரணம்! தவருன முறையில் சண்டை செய்ததாக எதிரி பயில்வான் கைது.

ஞானம் :-யாரு...குமரனு ?

மலையப்பர்:-இல்லே! குமரனே கொல்லப் போகிறவன் கைதவற மாட்டான்! ஞானம்! நமது ஊரில் ஒரு குத்துச் சண்டைப்போட்டிக்கு ஏற்பாடு செய்யப் போகிறேன். குமரனுக்கும்—இன்னொருவனுக்கும் சண்டை! அந்த இன்னொருவனை எமனுக மாற்றி குமரனை கொல்லப்போகிறேன்.

ஞானம் :-யார் அந்த இன்னொருவன் ?

மலையப்பர்:-பயில்வான்! பரமசிவன்

காட்சி 16

கந்தசாமி :-சபாஷ்! வெகு நாளாக எதிர் பார்த்திருந்த சான்ஸ் கிடைத்துவிட்டது. பயில்வான் பரமசிவம்! குமரா! நீ இவனை மட்டும் தோற்கடித்து விட்டால் நீதான் குத்துச் சண்டை இராசா!

குமரன் :-எங்கே? எப்போ...?

கந்தசாமி :-எல்லாம் ஒங்க சொந்த ஊரில்தான்! ஜமீன்தார் மலையப்பர் இல்லே...அவருதான் ஏற்பாடு செய்திருக்கிறார்.

குமரன் :-ஆ...மலையப்பரா ?

கந்தசாமி :-என்...? சம்மதம் என்று எழுதிவிடுமா ?

குமரன் :-சரி!

காட்சி 17.

மலையப்பர் :-குத்துச்சண்டை போட்டி எதற்காக என்று நினைத்தாய்? கிராம மக்களை குதூகலப் படுத்தவா? இதுதானு எங்களுக்கு வேலை? அந்த நாயைக் கொல்ல வேண்டும்?

பரமசிவம் :-கொல்றதுன்னு இலேசான காரியங்களா? தோற்கடிச்சுட்றேன்.

மலையப்பர் :-நீ வீராதிவீரன் என்று வெற்றி மாலை சூடுவதல்ல—எனக்கு வேண்டியது. அவனைக் கொல்லவேண்டும்.

பரமசிவம் :-அப்படி என்றால்...

மலையப்பர் :-தவறுன முறையில் சண்டையிடு!

பரமசிவம் :-குத்துச்சண்டை சட்டப்படி குற்ற மாச்சுதுங்களே...

மலையப்பர் :-சட்டம்! என்னிடம் சரணடையும்! தூக்கு மேடையில் இருப்பவனை காப்பாற்றும் துணிவு எனக்கு உண்டு! பாவம், புண்ணியம், நேர்மை, நீதி, இரக்கம், சட்டம், சம்பிரதாயம் இவைகள் என்னிடம் செல்லாது. அஞ்சாத பரமசிவம்! அவனை நீ கொல்லவேண்டும்! அதைக் கண்டு என் மனம் குளிரவேண்டும்.

(குமரனுக்கும்—பரமசிவத்துக்கும் குத்துச்சண்டை போட்டி நடை பெறுகிறது. பரமசிவம் தோல்வி அடைகிறான். குமரனுக்கு கிராம மக்கள் வரவேற்பளிக்கின்றனர்.)

குமரன் :-உங்கள் அன்பிற்கும், ஆர்வத்திற்கும் நான் எப்படி நன்றி தெரிவிக்கப் போகிறேன்?

ஒருவன் :-தம்பி! இன்னிக்குத்தான் நாங்க சந்தோஷத்தைக் கண்டிருக்கிறோம். பசி, பட்டினி, அடி, உதை இவைகள்தான் இங்கு!

குமரன் :-என்ன செய்வது? அந்த உயில் மட்டும் அகப்பட்டு விட்டால் இந்த ஜமீனையே உங்களுக்கு சொந்த

மாக்குவேன். ஜரிகைத் தொப்பி உங்களை ஆளாது! சவுக்கு சர்வாதிகாரம் செலுத்தாது! அந்தக் காட்டு இரா ஜாவின் கண் அசைப்பு கட்டளையாக இருக்காது!

ஜீவானந்தர் :-ஏழைகள் இன்பலோகத்தை கற்பனை செய்வதில் தனி ஆறுதல்.

குமரன் :-ஜீவானந்தரே! பக்தர்கள் கற்பனை செய்யும் சொர்க்க லோகமல்ல இது! முயன்றால் முடியக்கூடியது! நினைத்தால் நடக்கக்கூடியது! அதை அடைய நெற்றி நிறைய விபூதி அல்ல! நெஞ்சிலே தெளிவு – நேர்மையிலே நாட்டம்-இருந்தால் போதும்.

ஜீவா :-எதிர் பார்ப்போம்— அந்த நல்ல நாளை.

கும :-நல்ல நாள் நம்மை நோக்கி வராது! அதை நோக்கி நாம் கால் கடுக்க நடக்க வேண்டும்.

(குமரன் ஆடைகளை கொண்டு வந்து)

ஜீவானந்தரே! இதை எல்லோருக்கும் பங்கிட்டுக் கொடுங்கள்! உங்கள் புதுமை உள்ளங்கள் எனக்கு அளித்த பரிசு இது.

காட்சி 18.

மாத் :-சும்மா வா! வெட்கப்படாதே!

கும :-என்ன மாத்திரை!

மாத் :-உன் கிட்டே சொல்லாமலே...சிக்கனமா...உன் விலாசம் வேறே எனக்குத் தெரியலே.

கும :-விஷயத்தைச் சொல் மாத்திரை.

மாத் :-இவரு எனக்கு மாமனாராகவும் (ஜீவானந்தர்) நான் அவருக்கு மருமகளாகவும் ஆயிட்டோம்! என் மனைவி தைலம்!

கும :-அட...மாத்திரை—தைலம்! சொம்ப நல்லா இருக்கு!

மாத் :-ஜாதகப் பொருத்தம் இல்லாவிட்டாலும், மருந்து முறைப்படி சொம்பவும் பொருத்தம்.

கும :-அப்போ..... இதை உங்களுக்கு பரிசாக அளிக்கிறேன்.

(குமரன் வெளியேறுகிறான்.)

எல்லோரும் இருங்கள்! நான் என் தாயார் வீட்டுக்குப் போய் வருகிறேன்! பிறகு சந்திப்போம்.

(குமரன் போகிறான்)

("குமரன் வாழ்க" என்ற குரல் கூட்டத்தில் கிளம்புகிறது.)

காட்சி 19.

இடம் :—கல்லறை.

"குமரா! எப்படியாவது அந்த உயிலை கண்டு பிடித்து விடு"

(இது நாராயணியின் வேண்டுகோள்)

"வழக்கு நடத்த பணம் தேவை! பிறகு உயிலைத் தேடு"

(இது வைத்தியரின் குரல்)

கும :-பணத்தை தேடி விட்டேன். உயில்... ஆம் மலையப்பரின் மாளிகையில்...அங்கே மீனு இருந்தாள்...சீ... சதிகாரி... அவளை ஏன் நான் பார்க்கிறேன். உயில்... இல்லாவிட்டால் உயிர்.....

(உயிலைத் திருட குமரன் ஓடுகிறான் மலையப்பரின் மாளிகையை நோக்கி)

காட்சி 20.

இடம் :—மலையப்பர் மாளிகை.

(இரவு நேரம்)

மலை :-ஞானம்! நான் படுத்திருக்கிறேனே பஞ்சணை! நீ உடுத்தி இருக்கிறாயே பட்டுச் சேலை! இதெதற்கெல்லாம்

சொந்தக்காரன் இன்னும் உயிருடன் தான் உலாவுகிறான். அவனை ஒழித்தால் தான் எனக்கு நிம்மதி.

ஞானம் :-ஒழிந்து விடுவான் !

மலை :-எப்படி ஒழிவான் ? நீ மாத்திரம் நிதானமாக அந்த விஷத்தை கொடுத்திருந்தால் அவன் அன்றே ஒழிந்திருப்பான.

ஞானம் :-நான் என்ன செய்வேன் ? மீரு அவனுக்கு வைத்திருந்த பாலில் தான் விஷத்தை கலந்தேன். அதை அவன் அவனது தாய்க்கு கொடுப்பான் என்று எனக்குத் தெரியும் ?

(இதைக் கேட்ட குமரன் மீனுவை நிரபராதி என்று அறிந்து வெளியேறுகிறான்.)

காட்சி 21.

இடம் :—கல்லறை.

மணமில்லா மலர் நானம்மா !
மாதர் உலகில் வாழ்வே அறியா
மணமில்லா மலர் நானம்மா !

ஒடிந்து வீணை நாதமே இனியேது
இடியிதோ வீழ்ந்தே பூங்கா அழிந்ததே
மணமில்லா மலர் நானம்மா !

வாழ்வீலே விஷமே வீசியே மறைந்ததால்
மணமில்லா மலர் நானம்மா !

வாடிடும் கொடியானேன்
சூறாவளிக் காற்றிலே
மகரந்த இதழ்மிது மாசு தோய்ந்து மூடிய
மணமில்லா மலர் நானம்மா !

இன்பச் சுடர் காணேனே
இருள் வீட்டில் தனியானேன்
துன்பப் புயல் அலை மோதி
சோக வாழ்வுச் சோலையில்
மணமில்லா மலர் நானம்மா!

(மீனு சோகத்துடன் பாடிக் கொண்டிருக்கிறாள். குமரன் அங்கு வருகிறான்.)

கும :-மீனு...

மீனு:-குமரன்..... (அழாதே மீனு)...

கும :-என்னை மன்னித்து விடு மீனு! ஆமா...இந்த இருட்டில் நீ எப்படி தனியாக வருகிறாய்? வரலாமா இப்படியெல்லாம்?

மீனு :-வரக் கூடாதது தான்! ஆனல்...என் வாடிப் போன நெஞ்சிற்கு இது வரையிலும் என் மாமியின் சமாதி தானே ஆறுதலாக இருந்தது.

கும :-உன் நெஞ்சு இன்னுமா வாடிப் போயிருக்கிறது?

மீனு :-அகத்தின் அழகு முகத்தில் தெரியுமே...

கும :-எங்கே...பார்க்கலாம்.

(மீனு சிரிக்கிறாள்).

காட்சி 22.

பிரே :-குமரனுக்கு ஒண்ணும் பிடிவாதம் இல்லே ..எல்லாம் உங்களுக்குத் தான்.

சஞ் :-பிரேமா.....குமரன் உன்னைத்தான் கல்யாணம் செய்து கொள்வான்—கவலைப்படாதே! பிரேமா! அப்படியே ஊருப்பக்கம் போயிட்டு வர்றேன். வீட்டிலே பத்திரமா இரு! டேய் மாத்திரை! அந்தக் கண்ணன் தாயாருக்கு நாமதானே மருந்து கொடுக்கிறோம்...

மாத் :-ஆமாங்க.

சஞ் :-என்ன ஆச்சி !

மாத் :-சரியாப்போச்சிங்க ! வெளியூருக்கெல்லாம் ஆளை அனுப்பிச்சிட்டாங்களாம் !

சஞ் :-சீ.....போயி வண்டியை பூட்டுடா !

(மாத்திரை போனபிறகு)

பிரேமா ! முதலில் உயிலை கொடுக்க சஞ்சீவி ஏமாளி அல்ல ! திருமணம்—பிறகு உயில்.

பிரே :-திருமணத்திற்குப் பிறகு நீங்கள் ஏமாற்றிவிடூடால்.....?

சஞ் :-தேடாமல் வருகிற தேவாமிர்தம் ! சிரமப்படாமல் வருகிற ஜமீன் மாளிகை ! இவற்றை தேவை இல்லை என் பேரு ? இதோ பார்.....

(உயிலை எடுத்து கையில் வைத்துக் கொண்டு)

உயில் ! உல்லாச ஓடையிலை உன்னை உலவ விடும் படகு !

பிரே :-நீங்கள் உயிலை இழக்க மாட்டீர்கள் ! அவர் உறுதியை இழக்க மாட்டார் ! கடைசியாக நான் தான் என் காதலை இழக்க வேண்டும்.

சஞ் :-காதல்... இந்த உயிலை விடவா உயர்ந்தது ? இந்த மாளிகையை விடவா மதிப்பு வாய்ந்தது ? பிரேமா ! பாரேன் —பயல் உன் பாதத்தில் வந்து விழப்போகிறான். ஜாக்கிரதை ! யாரிடமும் உதட்டையும் அசைத்து விடாதே !

(வைத்தியர் உயிலை வீட்டில் வைத்து விட்டு வெளியூர் புறப்படுகிறார். பிரேமா உயிலுடன் குமரனிடம் செல்லுகிறாள்.)

காட்சி 23.

இடம் :—குமரனது குடிசை.

(இரவு நேரம்)

(பிரேமா உயிலை குமரன் மீது தூக்கி எறிகிறாள். தூங்கிக் கொண்டிருந்த குமரன் துரிதமாக எழுந்திருக்கிறான்)

கும :-உயில்... உயில்... என் உயிர்!

பிரே :-மெதுவா...

கும :-பிரேமா... நீயா கொண்டு வந்தாய்?

பிரே :-பிறகு யார் கொண்டு வருவார்கள் ஜமீன்தாரே?

கும :-நான் ஜமீன்தார் அல்ல! ஜனங்களின் ஊழியன்.—மக்கள் தொண்டன்! இந்த உதவியை மறக்க மாட்டேன் சகோதரி!

பிரே :-சகோதரி.....

(கல்லறையருகே)

கும :-அம்மா! உயில் கிடைத்து விட்டது! நீங்கள் தேடி அலைந்த செல்வம் கிடைத்து விட்டது! புதைந்து கிடந்த பொக்கிஷம் அகப்பட்டு விட்டது. இப்போதே போகிறேன் அந்தப் பொல்லாதவனிடம்.

பிரேமா :-குமரன்.....

(குமரன் மலையப்பனை மட்டம் தட்ட புறப்படுகிறான்)

காட்சி-24.

இடம் :-மலையப்பனின் மாளிகை

குமரன் :-இடைக்கால ஜமீன்தாரே, வணக்கம்! என் திகைக்கிறீர்? எஜமான் என்று வணங்கி வாவேண்டியவன்-எப்படியோ வந்திருக்கிறேனே...ஏதேதோ உளறுகிறேனே என்று?

மலையப்பன் :-டேய் குமரா ! (பல்லை கடித்தல்)

குமரன் :-பல்லைக் கடிப்பதும்—பறக்க விழிப்பதும் பயன் படாது இனிமேல்.

மலையப்பன் :-மரியாதை தவறிப் பேசாதே !

கும :-மரியாதை ! இனிமேல் அதை விலைக்கு வாங்க வேண்டியது தான் ! மரியாதை தவறுவதற்கு முன் மாளி கையை விட்டு வெளியேறி விடு !

மலை :-என்னை எதிர்த்தவர்களுக்கு எலும்பு தான் மிச் சம் !

கும :-அது கூட மிச்சப்படாது எழைகளோடு போரா டும் உன்போன்ற ஆணவக்காரர்களுக்கு ! நீ மிச்சப்படுத் தினையே...எலும்பு...அந்த எலும்பு தான் ஈட்டியாக மாறி உன்னை எதிர்க்க வந்திருக்கிறது !

மலை :-குமரா ! பைத்தியம் போல் பேசாதே !

கும:-படோடோப பனிக்காற்றும்—சூழ்ச்சி வெயிலும் —மமதை மழையும் இவைகளால் பாதிக்கப்பட்டு ஜமீன் தாருக்குத் தான் ஜன்னி கண்டு விட்டது. நான் பைத்தியம் தான் ! நெளியும் நெஞ்சம் எனக்கு இல்லை அதனல் !

மலை :-என்னடா உளருகிறாய் ?

கும :-உளருவதற்காகவா இவ்வளவு ஆவலாக ஓடி வந் தேன் !

மலை:-என்னடா கூறுகிறாய் ?

கும :-நான் கூறவில்லை ! உமது திருவிளையாடல் புரா ணம் முடிந்து விட்டது என்று இந்த உயில் கூறுகிறது ! ஊரார் முன் நீ போட்டிருந்த திரையை சுக்கல் சுக்கலாக கிழித்தெறிய வந்திருக்கிறேன். என்ன சொல்லுகிறாய் ? ஹும்...மரியாதையாக வெளியேறி விடு !

மலை :-குமரா..! தூங்கும் புலியை இடராதே !

கும :-அந்தப் புலித்தோலிலே வாழும் கோவேரிக் கழுதைக்கு குறி வைத்திருக்கிறான் குமரன் !

மலை :-குமரா ! பேசாதே !

கும :-பிணம் பேசாது !

மலை :-உன்னை கொல்லப்போகிறேன்.

கும :-இதே வார்த்தையை— இதே மாளிகையில் எத்தனையோ முறை கேட்டிருக்கிறேன். இதே வார்த்தையை சொல்லித்தான் எத்தனையோ பங்களாக்கள் தரைமட்டமாகி இருக்கின்றன.

மலை :-நான் மலையப்பன் !

கும :-சந்தேகம் இல்லை !

மலை :-உன் வீரப்பிரதாபத்தை குத்துச் சண்டை மேடையில் வைத்துக் கொள்.

கும :-இல்லை !

மலை :-இது என் வீடு !

கும :-இங்கே தான் வித்தியாசப்படுகிறாய் !

மலை :-என்னடா வித்தியாசம் ? விதியற்றவனே ! ஊர் சுற்றித் திரியும் ஊதாரி ! இவனுக்கு ஜமீன்...சொத்து... வீடு வாசல்...பழைய வேலைக்காரன் என்று விசுவாசம் காட்டினால் மரியாதையாக நடந்து கொள்ளத் தெரியவில்லை மடையனுக்கு ?

கும :-மலையப்பா ! பச்சையாகச் சொல்லுகிறேன் ! உன்னை வஞ்சம் தீர்க்கப் போகிறேன்.

மலை :-குமரா.....

கும :-பயப்படாதே...இப்போது அல்ல ! பொறுத்திருப்பேன்.

மலை :-குமரா ! என் சுண்டு விரல் அசைவிலே சுருண்டு போனவர்களின் பட்டியல் உனக்கு மனப்பாடம் இருக்கும் !

கும :-மனப்பாடம் இருப்பதால் தான் மறக்கவில்லை மடையனே கேள்! உன்போன்ற உலுத்தர்கள் உழைப்பாளி களின் ஆவேஷ மூச்சால் ஊதிவிடப்பட்டிருக்கிறார்கள்! இதோ...நாட்டு மக்களை வேட்டையாடிய உன் காட்டு ராஜா தர்பாருக்கு முடிவு கட்டும் உரிமை முழக்கம்! உன்னை வெட்டி வீழ்த்தும் சம்மட்டி! என்ன சொல்லுகிறாய்? ஏன் விழிக்கிறாய்? வியர்வை சிந்தாமல் வந்த விளைவு! கஷ்டப் படாமல் வந்த களிப்பு! பாடுபடாமல் வந்த பரவசம்! இவை களை எல்லாம் விட்டு விட்டு எப்படிப் போவது? கொஞ்சம் கஷ்டமாகத் தான் இருக்கும்! உரிமை பறிக்கப்படுகிறதே என்று பதைக்கிறாயா?

மலை : நான் செத்தாலும் எனது பிணத்தைக்கூட இங்கே தான் புதைக்கும்படி உத்தரவிடுவேன். உனக்கு உரிமை இருந்தால் இங்கே வந்து உறுமுவதும், உளறு வதையும் வைத்துக் கொள்ளாதே!

கும :-ஏழைகளின் நெஞ்சை பஞ்சு மெத்தையாக்கி அதிலே நடந்ததல்லவா உனது பாதம்! ஏழையின் இதயக் குழுறல் அல்லவா உனக்கு கீதம்! திக்கற்றவர்களின் இரத் தத்தை திராட்சை இரசமென பிழிந்து குடித்தவனல்லவா நீ! சந்திப்போம் சட்டத்துக்கு முன்னால்!

மலை :-போ! போய் விடு! இங்கு நில்லாதே!

கும :-போகிறேன். இதுதான் உனது கடைசி அதி காரக் குரல்.

(குமரன் போய் விடுகிறான்.)

(மலையப்பன் குமரனின் குடிசையில் தீயிட திட்டமிடுகிறான்)

(குடிசையில் தீப்பற்றி எரிகிறது)

காட்சி 25.

சஞ்சீவி :-பைத்தியக்காரப் பெண்ணே! நான் போட்ட திட்டத்தை ஒரு நொடியில் பாழாக்கி விட்டாய்!

பிரேமா :-என்னை மன்னிச்சிடுங்கப்பா!

சஞ்சீவி :-மன்னிப்பதற்கு நீ எனக்கா கேடு செய்து விட்டாய்? உன் தலையில் நீ மண்ணை வாரிப் போட்டுக் கொண்டாய்.

பிரேமா :-உயில் இல்லாவிட்டால் திருமணம் இல்லை என்றுரப்பா!

சஞ்சீவி :-இப்போது உயிலைகொடுத்தவுடன் விவாக சுப முகூர்த்தத்துக்கு தேதி குறித்து விட்டானுக்கும்?

பிரேமா :-தேதி குறிக்கவில்லை!

சஞ்சீவி :-பின்னே...திருமணத்துக்கு நிச்சயம் ஆகி விட்டதாக்கும்? எப்படியாவது போயித் தொலை...

[கதவு தட்டப்படுகிறது]

சஞ் :-யாரது? போயி பாரு பிரேமா...

(கதவைத் திறக்கிறாள்)

[குமரன் வெந்த உடலுடன் வந்து விழுகிறான்.]

காட்சி 26

மலையப்பர் :-ஞானம்! ஞானம்! கேட்டாயா ஒரு சந்தோஷமான செய்தி! குமரன் ஒழிந்தான்...வீட்டோடு எரிந்து சாம்பலாகி விட்டான்.

(இதைக் கேட்ட மீனு மயக்கமடைகிறாள்.)

காட்சி 27

இடம் :—சஞ்சீவி வீடு.

பிரேமா :-குமரன்...

குமரன் :-மீனு ..மீனு...மீனு...

சஞ்சீவி :-ஹ்ம் .....காதல், காதல் என்று கதை சொன்னையே...இப்போது என்ன செய்வாய்? அதோ கேட்கிறது பார் காதல் கீதம்

பிரேமா :—அப்பா...நான் செய்தது தவறுதான்... என்னை மன்னிச்சிடுங்கப்பா...

சஞ்சீவி :-அழாதே பிரேமா... நீ சந்தோஷமாக இருக்கவேண்டு மென்றுதானே கஷ்டப்பட்டேன்.

பிரேமா :-அப்பா...அவர் பிழைத்துக் கொள்வாரா?

சஞ் :-உன்னைப் பார்த்தால் எனக்கு சிரிப்புதான் வருகிறது.

பிரேமா :-அவரைப் பார்த்தால் எனக்கு பாவமாக இருக்கிறது.

சஞ் :-பாவம்! பாவத்தைப் பார்த்தால் பல மண்டுகங்கள் மாடமாளிகை, கூடகோபுரம் இவைகளை பார்த்திருக்க முடியாது! மலையப்பனைப் பார்! எப்படி வந்தது அவனுக்கு இந்த மந்தகாசமான வாழ்வு? பாவத்தை நினைத்தும் பார்க்காத காரணத்தால்! தோல்விதான் வெற்றிக்கு போடப்படும் முதல் படி! நீ குமரனை அடைய வேண்டு மென்றால் குமரன் மீனுவை மறக்க வேண்டும். குமரன் இறந்து விட்டதாக நினைத்துக் கொண்டிருக்கிறாள் மீனு...குமரன் நாம்வெளியே விடக்கூடாது! குமரன் உயிருடன் இருப்பது வேறு யாருக்குமே தெரியக் கூடாது! தெரிகிறதா? இதிலாவது ஜாக்கிரதையாக இரு!

(மாத்திரை கதவைத் தட்டுகிறான்)

அதோ...மாத்திரை தான் வர்ரூன் போலிருக்கு! இங்கேயே இரு!

(கதவைத் திறந்து)

டேய்! மாத்திரை.. நீ இன்னியிலிருந்து வேலைக்கு வர வேண்டாம்!

மாத்திரை :-அய்யய்யோ ..... நாய்க்குட்டி எங்கே போவுங்க?

சஞ் :-கண்டிப்பாகச் சொல்றேன்...நீ வேலைக்கு வர வேண்டாம்.

மாத்திரை :-நாய்க்குட்டி செத்துப் போவுங்க.

சஞ் :-ஒழுங்காக போயிடு!

மாத்திரை :-நாய்க்குட்டி போறதுன்னு ஒரு மாத நோட்டீஸ் கொடுக்கணுங்க!

சஞ் :-எனக்கு உன்னை பிடிக்கலே! உன் மேலே எனக்கு நம்பிக்கை இல்லே!

மாத்திரை : பிடிக்கலேன்னு சொல்லுங்க! நம்பிக்கை இல்லேன்னு சொல்லாதீங்க! நானென்ன காய்ச்சல்காரனுக்கு காலரா மருந்து கொடுத்தேனு? காலராகாரனுக்கு பேதி மருந்து கொடுத்தேனு? எனக்கும் தெரியும்! நானும் ஒரு போட்டி ஆஸ்பத்திரி வைக்கிறேன்! ஒங்ககிட்டே ஒரு நோயாளியும் வரமாட்டான்! நீங்களே நோயாளியா ஆக வேண்டியதுதான்! சஞ்சீவி வைத்தியரே விரைவில் எதிர் பாருங்கள்! மாத்திரை முன்னேற்ற ஆஸ்பத்திரியை!

[மாத்திரை போய் விடுகிறான்]

பிரே :-மாத்திரை பாவம்ப்பா!

சஞ் :-பாவத்தை பற்றிதான் முன்பே சொன்னேனே... குமரன் உயிருடன் இருப்பது—மாத்திரைக்குக் கூடத் தெரியக்கூடாது! இப்போது யோசி...பாவத்தை எப்படியெல்லாம் மறக்க வேண்டுமென்று!

காட்சி 28.

(இடம் குமரனின் சாம்பலான குடிசை)

மீரு :-எப்படி அவரது உயிரைக் கொன்றாய்? பாழும் நெருப்பே...பலிகார நெருப்பே...கருகிப்போன அவரது பிணத்தையாவது என் கண்ணிலே காட்டி இருக்கக் கூடாதா? அவ்வளவு பசியா உனக்கு? அத்தை...உங்கள் ஆசை மகன் போய் விட்டார்...இனிமேல் வரமாட்டார் அத்தே... (அழுகிறாள்)

[இந்நேரம் மீரு கீழே கிடந்த உயிலை எடுக்கிறாள்]

காட்சி 29.

இடம் :-சஞ்சீவி வீடு

சஞ்சீவி:- உயிலை பத்திரமாக வைத்திருப்பாய் என்று தானே உன்னிடம் அனுப்பினேன்! உயிலுடன் நீதிமன்றத்துக்கு அல்லவா போயிருக்க வேண்டும்; அவனிடம் போய் என் கார்ஜனை செய்தாய்? ஆமா...இப்போதாவது உயிலை பத்திரமாக வைத்திருக்கிறாயா?

கும :-உயில்...உயில்...உயிர்...!

சஞ்சீவி :- ஆம்! உயிர்தான்...எங்கே வைத்திருக்கிறாய்;

கும :-உயில்...தீயில் எரிந்து சாம்பலாகப் போயிருக்கும் வைத்தியரே!

சஞ் :-பார்த்தாயா...என்னிடமே பொய் சொல்லுகிறாயே!

கும :-இல்லாவிட்டால் மலையப்பனிடம் சிக்கி இருக்கும்.

[சஞ்சீவியும் பிரேமாவும் தனிமையில்]

சஞ் :-பிரேமா...!

பிரேமா :-ஏம்ப்பா !

சஞ் :-இனிமேல் நீ குமரனை மறந்துவிட வேண்டியது தான்.

பிரேமா :-ஏம்ப்பா...

சஞ் :-தெளிவாகச் சொல்ல வேண்டுமா ? இனிமேல் அவன் ஜன்தார் வீட்டு வாசல்லே கூட கால் எடுத்து வைக்க முடியாது ! இனிமேல் அவனை நம்பிப் பிரயோஜனம் இல்லை ! மறந்து விடு !

பிரேமா :-அப்பா...நீங்கள் சொல்வீர்களே பாவத் துக்கு விளக்கம்...அப்படி எத்தனை பாவம் வேண்டுமானு லும் செய்யத் தயார் ! அவரு எனக்கு கிடைத்தால் போதும் !

சஞ்சீவி :-(கோபத்துடன்) சீ...

(பிரேமர் போன பிறகு)

" பிரேமா...காதல்...பிரேமா குமரனை வெறுக்க வேண்டும் ! மீரு...குமரனை மறக்க வேண்டும். அவன் எங்கே பிசாசா சுத்திக்கிட்டு இருக்காரே..."

(இது வைத்தியனின் மனச்சாட்சி)

ஹாம்...பிரேமா...

(பிரேமா வருகிறாள்)

ஆத்திரத்தில் பேசிவிட்டேன்.....நீ குமரன் மீது கொண்டுள்ள காதலை நான் கெடுத்து விட விரும்பவில்லை ! நீ குமரனை மணக்க வேண்டுமானால் மீரு குமரனை மறக்க வேண்டும். அப்படித்தானே...

குமரனும்— மீரவும் திடீரென்று சந்தித்து விட்டால்...?

பிரேமா :-நாம்தான் அவரை வெளியே அனுப்ப மாட்டோமே...

சஞ்சீவி :—அனுப்பமாட்டோம்...நம்மையும் மீறி சந்தித்துவிட்டால்...இதற்கு நீ ஒரு பொய்ப்பிரச்சாரம் செய்ய வேண்டும்.

பிரேமா :-பிரச்சாரமா ?

சஞ்சீவி :—ஆம் ! குமரன் பிசாசாக மாறிவிட்டான். பேயாகத் திரிகிறான்..என்று.

பிரேமா :—மனிதனை பிசாசு என்றால் நம்புவார்களாப்பா ?

சஞ்சீவி :-மரம் செடிகள் அசைவதைப் பார்த்துக் கூட உலகத்தில் பலபேர் செத்திருக்கிறார்கள் ! குமரன் பிசாசாக மாறிவிட்டான் என்று ஒரு பெண்ணிடம் சொல் ! போதும் உலகம் பூராவும் தெரிந்து விடும் !

(காட்சி மாறுகிறது)

(ஆற்றங்கரை)

பெண் :-கன்னங்கரேர்னு வந்திச்சாம் ! காலைக் காணுமாம் ! காவக்கார அண்ணே சப்தம் போட்டுச்சாம் ! காத்துப்போல பறந்திடுச்சாம் !

(இவ்வாறுக பேய் விளம்பரத்தைப் பெண்கள் பரப்புகின்றனர்)

காட்சி 30,

(இடம் :—வைத்தியர் வீடு)

சஞ்சீவி :-எப்படியா வந்துச்சி ?

வந்தவர் :-திடீர்னு அவசரப்பட்டு கட்டை அவிழ்த்திட்டான்.

சஞ்சீவி :-இந்த கருப்பை போடு ! போ...போ... காயம் ஆறினாலும் விகாரம் விகாரம்தான்.

(வந்தவர் போன பிறகு சஞ்சீவி யோசிக்கிறான்)

"எப்படி இணமாச்சி... ?"

" அவசரப்பட்டு கட்டை அவிழ்த்திட்டான் "

(வைத்தியன் குமரனுக்கும் போடப்பட்டிருக்கும் கட்டு கனை அவிழ்க்க முடிவு செய்கிருன்).

சஞ்சீவி :-குமரா எழுந்திரு...

குமரன் :-ஏன்...வைத்தியரே...

சஞ்சீவி :-எத்தனை நாளைக்குத்தான் இப்படி கஷ்டப் படுவாய்? கட்டுகளை அவிழ்த்து விடப் போகிறேன்.

(அவிழத்துவிடுகிருன் அவிழ்க்கும் போதே காயம் ஆருமல் இருப்பதால் வேதனை தாங்காது கத்துகிருன்)

குமரன் :- (உவப்புடன்) உங்கள் உதவியை மறக்க மாட்டேன் வைத்தியரே...!

(குமரன் கண்ணுடியில் தனது வெந்து போன முகத்தை பார்க்கிருன். வெறி பிடித்தவன் போல் கத்துகிருன். குமரனது முகம் புலியின் முகத்தை விடப் பயங்கரமாக இருக்கிறது.)

குமரன் :- அய்யோ...அய்யோ...

சஞ்சீவி :-குமரன்! பதருதே...

குமரன் :-சண்டாளா...சதி செய்துவிட்டாய் என்னை பயங்கர மனிதனுக்கிவிட்டாய்...விகாரம்...பரம விகாரம்... என் முகத்தைப் பார்! பாவி என்னை பார்க்கமுடியவில் லையே...ஏண்டா என்னை சித்ரவதை செய்தாய்? சொல் லுடா சூதுக்காரா...நீ இதற்கு முன்பு எனது முகத்தை பார்த்திருப்பாயே...இப்போது பார் கேடுகெட்டவனே... எனடா உனக்கு இந்த கெட்ட எண்ணம்? நீ அந்த நெருப்பைவிட கொடியவன்! எங்கேடா எனது கண்? எங்கே எனது கண்? பால் வடியும் முகம்...பால் வடியும் முகத்திலே இரத்தம் வடிகிறது...குஷ்டரோகியை விட கொடிய முகம். கசங்கிய மலரைக்கூட கானை சகிக்கமாட்டார்

களே...கருகிப்போய்...சதை சதையாக பிய்ந்து தொங்கும் முகத்தை யாரடா பார்ப்பார்கள்? இதயம் இல்லாதவனே... இரக்கமற்ற கொலைகாரா...எனது குரல்வளையை நெறித்து கொன்றிருக்கலாமேடா...அம்மா.....அம்மா...உங்கள் குமரனைப் பாருங்கள் நீங்கள் முத்தமிட்ட கன்னத்தைப் பாருங்கள்...அம்மா

(பிரேமா வருகிறாள்)

பிரேமா :—ஆ...குமரன்...என்ன நடந்தது? எங்கே முகத்தை பார்க்கலாம்.

(குமரன் முகத்தை காட்டுகிறான். பிரேமா அதிர்ச்சி அடைகிறாள்.)

பிரேமா...உன் அப்பன் என்னை எள்வளவு அழகாக்கி விட்டான் பார்! இப்போது காதலிக்கிறாயா என்னை? காதல் காதல் என்று கதை அளந்தாயே... என் காலில் விழுந்து கதறினாயே. இப்போது காதலிக்கிறாயா என்னை? முத்தமிடுகிறாயா என் முகத்திலே? அணைத்து மகிழ்கிறாயா இந்த அலங்கோலத்தை? காதலி! காதலி! மனைவன் கேட்கிறான்—மாப்பிள்ளை பிடித்துவிட்டதா உனக்கு? பிரேமா...நீ இப்போது என்னை விரும்பமாட்டாய்...நீ வெறும் அழகை காதலித்தவள்! என் உள்ளத்தை காதலிப்பவள் ஒருத்தி இருக்கிறாள்! அவள் தான் என்...மீனு... மீனு...மீனு!

(மீனு...மீனு...என அலறிக்கொண்டு குமரன் வைத்தியன் வீட்டை விட்டு வெளியேறுகிறான்.)

காட்சி-31

(மீனு பாடிக்கொண்டிருக்கிறாள்)

பேசும் யாழே பெண் மானே
வீசும் தென்றல் நீ தானே
கேளேனே இனிமேல் இதுபோல் கீதம்.... (பேசும்)
தளா தீச்சுழலில்

தனியாய் விழ்த்தீரோ
மீளாசோகம் மீட்டிடும் யாழானேன்
மாளா காதலிலுல் வாழ்ந்தோமே காதல்... (பேசும்)

பாழும் பேயாக பாரினில் அலைவிரோ
தீரா துன்பம் தீட்டிய ஏடானேன்
மாறு பாசம்தனை மற்ந்தீரோ நேசம்.... (பேசும்)

குமரன் :—மீனு...மீனு ..

மீனு :—யாரது...? குமரன்...

(மீனு குமரனின் கொடூர முகத்தைக் கண்டு மயக்கமடைகிறுள்—மலையப்பன் வந்துவிடு கிறுன். குமரன் திரைமறைவில் நிற்கிறுன்)

சஞ் :—(மீனுவின் கையை பிடித்து பார்த்துவிட்டு) சரிதான்...

மலையப்பன் :—என்ன சரிதான்...?

சஞ்சீவி :—ஒண்ணு மில்லே...இந்த மாளிகையிலே மழலை மொழி கேட்டு ரொம்ப நாளாச்சிலே...

மலையப்பன் :—அப்படீன்னு ?

சஞ்சீவி :—சிறுவழிகாட்டி-குறுநடைபுரிந்து--தனிநடை போட்டு—தமிழ்மொழி பேசி தவழ்ந்து விளையாட உங்க ளுக்கு ஒரு மருமகனே...மருமகளோ...பிறக்கப்போகுது... மீனு...கொர்ப்பம்...

மலை :—அடி பாவி...

ஞானம் :—அட கடவுளே...

சஞ் :—எல்லாம் அவன் செயல்.

மலை :-சண்டாளி! அவமானச்சின்னமே...ஊராா் நடுங்க வாழ்ந்த எனக்கு ஊழல் தேடிவிட்டயே . உன்னை அங்கம் அங்கமாக வெட்டிப்போட்டாலும் ஆறுதடி என் ஆத்திரம்.

மீரு :—என்... துடிக்கிறீர்? இப்போது என்ன நடந்து விட்டது?

மலை :—இனியும் வேறு என்ன நடக்கவேண்டும்? எஜமான் நமஸ்காரம் என்று என்னை எப்படிப்பட்டவர்களெல்லாம் வணங்கி வாழ... இழிவை உண்டாக்கிவிட்டாயே... விபசாரி!

மீரு :- நான் விபசாரியல்ல! முறைப்படி காதலித்தவனை முழுமனதோடு கணவனாக ஏற்றேன். அவன் தந்தை வைர மிலையை என் வயிற்றிலே வளர்க்கிறேன்.

மலை :—காதலன்...கணவன்...மீரு...

மீரு :—சிறிப்பாயும் ஜமீன்தாரே...நீர் சிரித்து மகிழும் சிம்மாசனம் யாருடையது என்று எனக்குத் தெரியும்.

மலை :—எனக்கும் தெரியுமடி.

மீரு :—கயவன் காட்டிய கண்கட்டி வித்தையில் ஜமீன்தார ரானீர்!

மலை :—உன் ஆசை நாயகனின் எண்ணமெல்லாம் தகர்ந்துவிட்டது—தணலாகப் போய்விட்டது.

மீரு :- தணலாகவில்லை—வெறும் கனவு! அந்த உயில் இன்னும் சாம்பலாகி விடவில்லை!

மலைய :—சாம்பலாகவில்லையா? எங்கே இருக்கிறது? கொடு...

சஞ் :—"அந்த உயில் இன்னும் சாம்பலாகிவிடவில்லை" ஹும்... இங்க வாங்க...

(சஞ்சீவியும், மலையப்பனும் தனிமையில்)

சஞ் :—மீரைவைக் கொல்லுவதால் உங்களுக்கு என்ன பிரயோசனம்? ஜெயிலுக்குப் போகலாம், அவ்வளவுதான்!

மலை :—இந்த அவமானத்தை எப்படி போக்குகிறது?

சஞ் :—மானமாவது? அவமானமாவது? நான் சொல்லுகிறபடி செய்யுங்கள்...

மலை :—சொல் சீக்கிரம்...

சஞ் :—மீனுளிடம் பிரசவத்துக்கு மலைபங்களா தான் சரியான இடம் என்று சொல்லி—மீனுவை பலைபங்களாவுக்கு அழைத்துச் செல்லவேண்டும்! குழந்தை பிறந்தவுடன் குழந்தையைக் கொன்றுவிடவேண்டும்.

(குமரன் இதை கேட்கிறான்)

மலை :—குழந்தையைக் கொல்வதா?

சஞ்;—என் யோசனைப்படி கேட்டு நடவுங்கள்! குழந்தையைக் கொன்றுவிட்டால் கவலையே இல்லை.

மலை :— உயில் அவளிடம் இருக்கிறதாமே...

சஞ் :—சும்மா சொல்லுவாள்... அப்படி இருந்தாலும் குமரன் இல்லாமல் அதை வைத்துக்கொண்டு அவள் என்ன செய்யமுடியும்? பயப்படாமல் செய்யுங்கள்! நான் இருக்கிறேன்.

காட்சி-32

ஒருவன் :—இருட்டு போயி இனிமேல் திரும்பக்கூடாதப்பா! பிசாசு அடிச்சிடும்.

மற்றொருவன் :—ஆமா...ஆமா...அதுவும் இலேசான பிசாசா? குத்துச்சண்டை தெரிஞ்ச பிசாசு!...

ஒரு :-ஏ...குட்டி...வண்டியிலே கொஞ்சம் வேப்பிலையை சொருகு...ஊரெல்லாம் பிசாசு பயமா இருக்கு...

ஒருவன் :—ஆமா...இந்தப் பிசாசை ஒழிக்கிறதுக்கு என்ன செய்யுறது?

அண்ணமலை :-அம்பாள் கோவிலுக்கு பூஜைபோட்டு —பிராத்தனை செய்தால் சரியாப்போகும்.

ஒரு :-நேத்து இராத்திரி எங்க வீட்டு கூரையிலே வந்து கூ...கூ...ன்னு கத்துச்சி!

மாத்திரை :-ஆந்தையா இருக்கும்.

ஒரு :-அட...சட சடன்னு எறங்கி போச்சப்பா...

மாத் :-ஆமா...ஆமா...இருக்கும். நான்கூட நேத்து இராத்திரி வெளியிலே காத்துவாங்கப் போனேன். கருப்பா ...கனமா...கட்டையா வந்துச்சி! எனக்குள உடம்பு வேர்த்து விறுவிறுத்துப்போச்சி! பார்த்தேன்...அதுவும் போச்சி! பின்னாலேயே போனேன்...வைத்தியர் வீட்டு பக்கமா திரும்பிச்சி! என்னடா வைத்தியர் வீட்டுப் பக்கமா போகுது? பிசாசுக்கு உடம்பு சரியா இல்லையோ..வர்ற வழி யிலே எதுவும் ஆயிடுச்சோ...வைத்தியர் வீடு பக்கமா போகுது? நான் விடல்லே...பின்னாலேயே போனேன்—நம்ம கோடிவீட்டு கோமளம் இல்லே...அதான் ஒரு மாதிரி... அந்த வீட்டுக் கதவை தட்டுச்சி! பார்த்தேன்...சரிதான்... என்னமோ நடக்கப்போகுது.....விளக்கை தூக்கிக்கிட்டு கோமளம் வந்தாள். நான் பார்த்தேன்...யாரு தெரியும்லே... நம்ம அம்பாள் கோவில் பூசாரி...இந்த முட்டாள் பயல் சிநேகிதன்—சங்கரமூர்த்தி! போங்கடா போக்கத்தவங் களா!

அண்ணாமலை :-டேய்...கிண்டலாபண்றே?

மாத்திரை :-ஒருத்தன் கருப்பா வந்தி எடுப்பான்! அதைப் பார்த்துக்கிட்டு இன்னொருத்தன் காகா நிறமா வந்தி எடுத்தானபான்! இன்னொருத்தன் சொல்லுவான்... காகா...காகாயா வந்தி எடுத்தான்பான்.

அண்ணாமலை :-டேய்! இவன் பேச்சை நம்பாதீங்க ஊர் உருப்படாது.

மாத்திரை :-இவன் பேச்சை நம்புங்க—ஊர் உருப் படப்போகும்! போங்கடா!

காட்சி 33

(இடம் :-மலேபங்களா)

மீனு :-வைத்தியரே! இந்த மலேபங்களாவுக்கு வந்திருப்பது குழந்தையைக் கொல்லும் சூதாக இருக்காதே...

சஞ் :-சிவ சிவா சிசுஹத்தி...உயிர்களை காப்பாற்றுவதையே தொழிலாகக் கொண்டவன் நான்...நினைப்பேனா அந்த நாச வேலையை?

மீனு :-குழந்தையை வளர்க்க அண்ணன் சம்மதிக்க மாட்டாரே!

சஞ் :-இதோ.....நான் இருக்கிறேன்.....பிரமாதமா இருக்கிறுள்! எனக்குப் போரக்குழந்தை மாதிரி!

மீனு :-என்னமோ...இந்தக் குழந்தை குமரன் குழந்தை! இதைப் பார்க்க குமரனுக்கு கொடுத்து வைக்கலே.....

சஞ் :-அடா... அவன்தான் டேரனுன்...அந்த உயிலே யாவது பத்திரமாக காப்பாற்றக் கூடாதா?

மீனு :- பத்திரமாக இருக்கிறது வைத்தியரே!

சஞ் :-இருக்கிறதா?

மீனு :-இதோ.....! (உயிலைக் கொடுக்கிறுள்)

சஞ் :-ஆமா...இதை கையோடே எடுத்துக்கிட்டு வந்துட்டியே பிரசவ நேரத்திலே அண்ணன் கையிலே கிடைச்சுட்டா ஆபத்தாச்சே!

(மீனு உயிலை வைத்தியரிடம் கொடுக்கிறுள்)

சஞ் :-ஹூம்! வேண்டாம்...நீயே பத்திரமாகவைச்சிரு! ஆமா .....என் மருந்து பெட்டியிலே இருந்தால் யாரும் பார்க்கவே மாட்டாங்க!

(வைத்தியன் தந்திரமாகப் பேசி உயிலை மீனுவிடம் இருந்து வாங்கி விட்டான்)

(நாட்கள் பல கடந்தன)

(மீனுவுக்கு குழந்தையும் பிறந்தது. ஆனால் குழந்தை வைத்தியன் திட்டப்படி கொல்லப்படவில்லை. குழந்தையை குமரன் தூக்கிக்கொண்டு போய் விட்டான். மீனு உள்ளம் உடைந்து மலைபங்களாவைவிட்டு வெளியேறுகிறாள். கிணற்றில் விழுந்து தற்கொலை செய்து கொள்ளப் போகும்போது ஒரு திருடன் வருகிறான்)

திருடன்,—ஏய்...நில்லு

மீனு:—யார் நீ?

திருடன்,—யாரா? இந்த அழகான உடலை கிணற்றிலே தள்ளி சாகப்போறீயே...உனக்கு அறிவு இல்லே...

மீனு:-அய்யா...என்னால் பேச முடியாது!

திருடன்:-நீ பேச வேண்டாம்! வா என்னோட! என் மேலே நம்பிக்கை இல்லையா உனக்கு? இந்தா பாரு!

(திருடி வந்த நகைகளை காட்டுகிறான்)

அவ்வளவையும் உன் மயில் கழுத்திலே போட்டு உன்னை மகாராணியாக்குவேன்...வா என்னோட.....இரா சாத்தி மாதிரி வாழலாம்...

மீனு:-ஏய்...விடு என்னை...நான் சாகத்துணிந்தவள்.

(திருடன் மீனுவை தன்னுடன் வரும்படி வற்புறுத்துகிறான். மீனு மறுக்கிறாள். இருவருக்கும் இடையே போலீஸ் கூட்டம் வரவே—திருடன் நகைகளை போட்டு விட்டு ஓடி விடுகிறான். மீனு திருடியாக்கப்பட்டு இழுத்துச்செல்லப்படுகிறாள்.

(போலீஸாரால்)

காட்சி 34

(இரவு நேரம்)

கிராம வாசிகள்

ஹா ஹா ! வருவாய் வருவாய்.....
வைபோக சுந்தரியே.....
சைபோக செளந்தரியே !
சைரந்திரியே...கண்ணே...வருவாய்...
கீசகன் ஆசைகொண்ட கிச்சிலிப் பழமடி நீ...
காச நோய்போல வந்த காதலுக்கு மருந்தடி நீ...
ஆணழகா மம்முதா ஆசைகொண்ட கீசகா !
கீசகா ! கீசகா !
கீசகா.....டேய்...
கிறுக்குத்தனமாய் வந்து மீசையை
முறுக்கி விட்ட குரங்கே ! பெரிய குரங்கே !
எட்டுத் திக்கும் நடுநடுங்க
முரசு கொட்டும் பீமசேனனிடம்
வாலாட்டமா...?
வாலாட்டமா...?

(திருக்கூத்து நடந்துகொண்டிருக்கும்போது குமரன் வருகிறான். ஜனங்கள் குமரனின் கொடிய முகத்தைக் கண்டு பயந்து ஓடுகின்றனர். அதிலே மாத்திரையின் மனைவி தையலும் ஒருத்தி ! குமரன் மாத்திரையை வைத்தியம் பார்க்க அழைக்கிறான். மாத்திரை மறுக்கிறான், குமரன் தூக்கிச் செல்லுகிறான் மாத்திரையை. இறுதியாக மாத்திரை குமரனே மனிதன் என்று உணர்ந்து மக்களிடம் ஓடுகிறான்)

(பூஜை நடந்துகொண்டிருக்கிறது கோவிலில்)

மாத்திரை :—ஏ.....முட்டாள்களே ! யாரு பிசாசு ?

ஒருவன் :— இவன்தாண்டா பிசாசு !

அண்ணுமலை :—விடாதீங்க இவனே!

மாத்திரை :—இது ஜமீனுக்கு அடிமை பிசாசு! இது மக்களை (பூசாரி) ஏமாற்றுகிற பிசாசு! இந்த இரண்டுக்கும் பெரியது ஜமீன்தார் பிசாசு!

அண்ணுமலை :—இவன் பேச்சை நம்பாதீங்க!

மாத்திரை ,—இவன் பேச்சை நம்புங்க! ஊரு உருப்பட்டுப் போகும்! குமரன் பிசாசு இல்லே ..

ஜீவானந்தர் :—மாத்திரை! ஏம்பா இந்த வம்பு? நீ தான் நிரூபிச்சிக் காட்டேடன்.

மாத்திரை :—இவரு வேறே...ரெண்டும் கெட்டான். இப்ப நிரூபிச்சிக் காட்டேறன் பாருங்க. (போகிறான்)

அண்ணுமலை :—ஓடிட்டாண்டோ...

மாத்திரை :—அய்யோ...

(குமரன் வருகிறான் பலர் பயப்படுகின்றனர்)

குமரன் :—என் பயப்படுகிறீர்கள்? நான் பேய் இல்லே! பேய் என்று ஒன்று இல்லவே இல்லே! பேய்க்கு சொல்லப் படும் இலட்சணங்கள் மனித ரூபத்தில் தான் நடமாடுகின்றன! வீரர்கள் உலாவுகின்ற பூமியிலே வாழ்ந்த நாம்... விவேகிகளின் மண்ணிலே வாழ்ந்த நாம்...வெறும் கற்பனைக் கதைக்கு — விஷமக்காரர்கள் கட்டி விடும் கட்டுக் கதைகளுக்கு அடிமையாவதா? அறிவை இழப்பதா? ஆண்மையை பலியிடுவதா? எச்சில் பணத்துக்காக இனத்தை காட்டிக் கொடுத்தவன் ஒரு பேய்! சொந்த வாழ்க்கையை நந்தவனமாக்கிக் கொண்ட நயவஞ்சகன் ஒரு பேய்! சூது செய்து கூரண்டிப் பிழைப்பவன் ஒரு பேய்! கண்பார்க்களே... சிந்தித்துப் பாருங்கள்.... நான பேய்? உங்களில் வீரர்கள் ஒருவருமே இல்லையா?

(ஒரு சிறுபையன் குமரனிடம் போகிறான்)

குழந்தைகளைவிட கோழைகள் நாம்! இளமையிலே ஓடக்கூடிய விசுவாச இரத்தம்! வீர இரத்தம் பலியிடப்படுகிறது! எதால்? மூட நம்பிக்கை என்னும் பேயால்.

(கூட்டத்தில் குமரன் வாழ்க என்ற குரல் கிளம்புகிறது)

காட்சி 35

(மாத்திரை குமரனின் குழந்தையுடன் கொஞ்சுகிறான்)

மாத்திரை :-ஏன்... குமரா வருத்தமா இருக்கே.. சொல்லமாட்டே? சொல்லாட்டி மறுபடியும் பிசாசு பிரசாரம் செய்ய ஆரம்பிச்சுடுவேன்.

குமரன் :-நம்புவாங்களா?

மாத்திரை :- இந்த ஜனங்க எதையும் நம்புவாங்கப்பா! அப்போப்பட்ட இராமலிங்க சுவாமியே சொன்னாரு—பேய், பிசாசு. இல்லேன்னு... கேட்டாங்களா?

(அந்நேரம் பிரேமா குமரனிடம் வந்து சேருகிறாள் குற்றத்தை உணர்ந்து - குழந்தையை வளர்த்து வருகிறாள்)

காட்சி 36

(இடம் :-ரோடு)

குமரன் :- ஜீவானந்தரே! தலைவிதியை காரணம் காட்டி மக்களை தரித்திரத்தில் தள்ளுவது தவறு. மக்களை மக்களாக்கி எதற்கு அடிமையாகாமல் தடுப்பதுதான் சீர் திருத்தம்!

ஜீவானந்தர் :- அந்த வேலையை இன்றே ஆரம்பிப் போம்.

குமரன் :- மீனு இருந்தால் எவ்வளவோ உதவியாக இருந்திருக்கும்.

ஜீவானந்தர் :- மீனு ஜமீன்தாருடன் அமெரிக்காவுக்குத் தான் போயிருப்பாள்.

(குமரனும், ஜீவானந்தரும் கிராம சேவையில் ஈடுபடு கின்றனர்.)

7 குமரன், கிராமவாசிகள்

புதியதோர் பாதை வகுப்போம்—நாம்—கெட்ட
போரிடும் பாதையை சாய்ப்போம் நாம்.....
நித்தம் உழைத்தே உயர்வோம் நாம்—
நெறி தவறுமல் வாழ்வோம் நாம்—
அஞ்ஞானப் பாழ் வெளியையே—நல்
அறிவாகும் ஏர் முனையிலுல்...
விஞ்ஞானப் பேரறிவினுல்—உழுதே
மெய்ஞானம் காண்பவர்கள் நாம் !

8 மாத்திரை

வாழ்க வாழ்க வாழ்க வாழ்கவே
அருமை மிகுந்த எங்கள் அறிஞர்
அண்ணு வாழ்கவே
குமர அண்ணு வாழ்கவே.
பெருமை பேசும் மனிதரெல்லாம்
எதற்கெடுத்தாலும் எருமை போல
தலையசைப்பதை உரிமைக்காக
எதிர்த்து நிற்கும்
அண்ணு வாழ்கவே
எங்கள் அண்ணு வாழ்கவே.

புழுவாகத் துடிக்கின்ற ஏழை
கழுகாகப பறக்கின்ற சீமான்—இந்தப்
பொல்லாத பேதங்கள் எல்லாம்
இல்லாத பொன்னுடாய்ச் செய்தார்—அந்த
அண்ணு வாழ்கவே
குமர அண்ணு வாழ்கவே-
எலியாக வாழ்கின்ற விதவை
பலியாக தருகின்ற இளமை
புலியாக பாய்கின்ற பழமை
மலிவாகப் போன இக்கொடுமை
மாற்றிடும் அண்ணு வாழ்கவே !
குமர அண்ணு வாழ்கவே.
சில சில இடங்களில் பணத்தோட்டம்—அது
செல்வக் குமரி...கோட்டம்! இப்படிப்
பலபல கருத்துக்கள் சொல்லும் தேனூறு
பகுத்தறிவூட்டும் லட்சிய வரலாறு—
அண்ணு வாழ்கவே
குமர அண்ணு வாழ்கவே.

காட்சி 37

சிறையில் இருந்து விடுதலை அடைந்த மீனு தற்கொலை செய்து கொள்ளப்போகும்போது குழந்தையின் கதறலை கேட்டு குழந்தையை தூக்குகிறாள். புயல், இடி, மின்னல், மழை அத்தனையும் சேர்ந்து வருகிறது. மீனுவின் இரு கண்களும் கோவிலின் முன்பு இருந்த ஈட்டியில் பாய்கிறது)

காட்சி 38

மலையப்பன் :- டேய்! அண்ணுமலை! என்னடா திமிர் இந்த ஊருப்பயல்களுக்கு! நான் அமெரிக்காவில் இருந்து வந்திருக்கிறேன். வரவேற்கிறதுக்கு ஒரு பயலும் காணோம்!

அண்ணுமலை :- அமெரிக்கா என்னங்க? சொர்க்க லோகத்திலே இருந்து வந்தாலும் கவனிக்க மாட்டாங்க! முன்னேற்றம் தலைவிரித்தாடுது! ஜனங்கள் பூராவும் குமரன் பேச்சைத்தான் கேட்குது.

மலையப்பன் :-குமரன்! போய் கூட்டிவாடா!

அண்ணுமலை :-யாரங்க?

மலையப்பன் :-பூசாரி, புரோகிதர். வைத்தியர் எல் லோரையுமே.

(அண்ணுமலை போகிறான்)

பூசாரி :-கிணத்துத் தவளையா இருந்தவங்களே... பேப்பர், புத்தகம் படிக்கவைச்சி கெடுத்துட்டான்.

புரோகிதர் :-படிக்க ஆரம்பித்தாலே—விழிக்க ஆரம் பித்தது மாதிரிதானே!

மலையப்பன் :-முட்டாள்களே; இத்தனை நாளும் விட்டு விட்டு இப்போது வந்து முறையிடுகிறீர்கள். நான் இருக கிறேன்—எனது பணம் இருக்கிறது.

புரோகிதர் :-பகவானும் இருக்கான்.

மலையப்பன் :-ஏய்...பூசாரி...நீயும் கூடப்போ.

பூசாரி :-உத்தரவு!

(வாசக சாலையும், கல்விக்கூடமும் கயவனின் கட்டளை யால் கலைக்கப்படுகிறது)

மலையப்பன் :-டேய்! நம்ம மாளிகையின் வாசலே இடித் தெறி!

அண்ணுமலை :-இடிக்கவா?

மலையப்பன் :-இவ்வளவு பெரிய மாளிகைகூடாது என் பதற்காக இல்லேடா இளிச்ச வாயா! இடித்தெறி! சொல்கிறேன்.

அண்ணுமலை :-ஆச்சிங்க.

மலையப்பன் :-டவுனுக்குப் போயி பாலீஸை கூட்டிவா! வண்டிலே போ.....ரெண்டு மணிநேரத்திலே சீக்கிரம் வரணும்!

(அண்ணுமலை போகிறான்)

காட்சி 39

மக்கள் :-அநியாயம்!

குமரன் :-அன்பர்களே! அமைதியாக இருங்கள்! கன்யம், கட்டுப்பாடு, ஒழுங்கு இவைகளை காப்பாற்றுங்கள். பலாத்காரம்—ஒரு பயங்கரமான நோய்! நமக்கு நாமே வெட்டிக்கொள்ளும் படுகுழி! நானே நேரில் போகிறேன்.

(காட்சி மாறுகிறது)

(இடம் :-மலையப்பனின் மாளிகை வாசல்)

மலையப்பன் :-இவன்தான் அந்தச் சண்டாளன், சதி காரன், நாஸ்திகன், கொடியவன், கொலைகாரன்...புரட்சி காரன்.....

குமரன் :-என் நிறுத்திவிட்டீர்? கள்ளன், கபடன், கடவுளை நிந்திப்பவன். கண்ணீர்த்துளி. கயவன். என்றெல் லாம் உண்டே உமது அகராதியில்!

மலையப்பன் :-உனது ஜாலவித்தையால் எனது ஜமீனை கெடுத்தாய், உனது மாயவலையில் சிக்கியவர்களைக் கொண்டு எனது மாளிகை வாசலை இடித்தெறிந்திருக்கி றாய்! என்...இவர்கள் வராவிட்டால் என்னையே கொன்றி ருப்பாய்!

குமரன் :—இதை யெல்லாம் போலீஸார் அவர்கள் நம்பவேண்டுமென்கிறீரா? இதோ வீடு இழந்தோர், வீதியிலே நிற்போர்—விழிகளை குளமாக்கிக் கொண்டோர் இவர்களது கணக்குகளை எண்ணிப்பார்க்கட்டும்! பிறகு சொல்லட்டும்...பலாத்காரம், வெறிச் செயல் இவைகளுக்குப் பிறந்த ஏகபுத்திரர்கள் யார் என்று?

மலையப்பன் :—பார்த்தீர்களா...அவனது பாஷையிலேயே பலாத்கார வாடை வீசுவதை.

சப் இன்ஸ் :—குமரன் கிராமத்தின் அமைதியைக் கருதி உம்மை கைது செய்கிறோம்!

குமரன் :—ஆ!

மலையப்பன் :—என்னடா, ஆச்சரியக்குறி போடுகிறாய்!

குமரன் :—ஆச்சரியக்குறிதான்! கொஞ்சம் வளைந்தால் கேள்விக் குறியாக மாறிவிடும்! கேள்விக் குறிக்கும் அரிவாளுக்கும் அவ்வளவு வித்தியாசம் இல்லை! என்பது ஞாபகம் இருக்கட்டும். அரிவாள் என்றுல் ஆளை வெட்டும் அறிவாள் அல்ல உமது அதிகாரத்தை, ஆணவத்தை, அறியாமை விருட்சத்தை வெட்டும் அறிவாள்! இதைக் கேள்! அறிஞரின் பேனாவே ஒரு அறிவாள்!

சப் இன்ஸ் :—குமரன்! நீர் குற்றமற்றவராக இருக்கலாம். ஆனல், ஜமீன்தார் தந்துள்ள சாட்சியங்களிலிருந்து உம்மை கைது செய்ய வேண்டியிருக்கிறது. உண்மைகளை கோர்ட்டில் வந்து நிரூபித்துக் கொள்ளலாம். அது வரையிலும் உம்மை பாதுகாப்பில் வைக்க நேரிடுகிறது.

குமரன் கைது செய்யப்படுகிறுன்)

(ஜனங்கள் எதிர்க்கின்றனர்)

குமரன் :-தோழர்களே! போலிஸார் அவர்களது கடமையைச் செய்கிறார்கள்! அவர்களுக்கு ஆத்திரத்தை

வினவிக்கா தீர்கள்! உங்கள் அத்தனை பேருக்கும் நான் ஒருவன் சாகிறேன்! ஆனால்... எனக்காக நீங்கள் சாக வேண்டாம். போகிறேன்! திரும்பினால் சந்திப்போம்!

பின்னணிப் பாடல்

எதையும் தாங்கும் இதய வேணடும்
பகையும் பழியும் பாம்பெனத் தீண்டும்—உலகில்
எதையும் தாங்கும் இதயம் வேண்டும்
சிறையா வதையா இன்னும்..... (எதையும்)

சாக்ரட்டீஸ் வாழ்வினைப் பார்
சாகாத காந்தி முடிவையுமே பார்
வேதனையாலே வீழாதே
சோதனையாலே வாடாதே—நீ வாடாதே
சோதனையாலே வாடாதே—வரும்..... (எதையும்)

தேனெனும் வாழ்வே தேளாய் மாறும்
போர்முனைச் சாவே பொதுவாழ்வில் இன்பம்
ஆணவம் சிறலாம், ராணுவம் பாயலாம்
சீற்றத்தைக் கண்டு சிதறுதே-உளம் சிதறுதே
தூற்றலைக் கேட்டுத் துவளாதே-பகை.....
(எதையும்)

வணக்கம்.

(பகுத்தறிவாளன் சிறையிலே வாடினான், பழமை விரும்பிகள் மக்களை புது வாழ்வுக்கு திருப்பினர். எந்தக் குமரனை மக்கள் மகிழ்ச்சி அடைந்தார்களோ... அதே குமரனை வெறுக்கின்றனர் அப்பாவி மக்கள்)

32 32

காட்சி 40

சஞ்சீவி :— மந்தமாகி விட்டது மக்கள் அறிவு! மனிதனுக்கும், மாட்டுக்கும் வித்தியாசம் தெரியாத அளவுக்கு மாறிவிட்டது! இனி மலையப்பர் ஜமீன்தார் மட்டுமல்ல! இந்த உலகத்தையே ஆளக் கூடியவர்! மனிதனை கடவுளாக்குகிறதும், கடவுளை மனிதனாக்குகிறதும் பிரச்சாரம் தான்!

பூசாரி :—எசமான்!

மலையப்பன் :—என்ன பூசாரி?

பூசாரி :—என்மகன் ஒருத்தன் இருக்கான். பெயர் காளி பாபா! வயது பத்து இருக்கும். சர்வ மூலிகைகளுக்கும் பச்சிலை தர்றுன்னு நல்ல வருமானம் இருக்கும்.

மலையப்பன் :—காளிபாபா! நம்புவாங்களா?

சஞ்சீவி :—அதான் சொன்னேனே! கடவுளை மனிதனாக்குவதும், மனிதனை கடவுளாக்குவதும் பிரச்சாரம் தான் என்று.

அண்ணுமலை :—அந்த வருமானத்திலேபாதி அம்பாள் கோவிலுக்கு, பாதி ஜமீன்தாருக்கு!

மலையப்பன் :—சரி! அப்படியே செய்!

காட்சி 41

("குமரன் வழக்கு தீர்ப்பு. குமரனின் வேகம் நிறைந்த ஆர்க்மெண்ட். தீர்ப்பை அறிய மக்கள் அவா")

நீதிபதி :—இருதரப்பு வாதங்களைக் கொண்டும்-சாட்சிகளையும் ஆராயும்போது குமரன் புரட்சிக்காரன், பலாத்கார வாதி, கடவுளை நிந்திப்பவன் என்று தெரியவில்லை. மக்களை படிக்கச் சொல்வது, ஏகமனதான கடவுளை கும்பிடுவது

இதுபோன்ற காரியங்கள் புரட்சிக்காரனுகவோ, பலாத்கார வாதியாகவோ இருந்துவிட முடியாது! ஜமீனை ஒழிக்க சர்க்கார் நடவடிக்கை எடுத்துவரும் இந்நாளில் குமரன் ஜமீன்தாரின் அட்டகாசங்களை அடக்கவே பாடு பட்டிருக்கிருன். ஆகவே...குமரனை குற்றமற்ற நிலையில் விடுதலை செய்யப்படுகிறது.

(குமரன் வெளியேறி வரும்போது...(குருடி)மீனு பிச்சைகாரியாக)

மீனு :—அய்யா.....காலணு.....போடுங்கய்யா

குமரன் :—ஆ...இது யார் குழந்தை?

மீனு :—என் குழந்தை தானய்யா!

குமரன் :—அய்யோ...என் மீனு விபச்சாரி! என் மீனு விபச்சாரி!

ஜீவானந்தர் —குமரன்! குமரன்!

மீனு :—ஆ...என் குமரனை! குமரன்...குமரன்...

குமரன் :—சீ...தொடாதே காலை!

மீனு :—குமரன்! இது என் குழந்தை அல்ல! இக் குழந்தையைப்பற்றி கடிதத்தில் என்ன எழுதி இருக்கிறது என்று பாருங்கள்!

கடிதத்தில் :—" இக்கடிதத்தைக் காணும் கருணை உள்ளம் படைத்தவர்களே...மேல் ஜாதிக்காரனின் காதலை நம்பிக் கைவிடப்பட்டவளின் கடைசி ஆசையை நிறைவேற்றுங்கள். இந்தக் குழந்தையை எப்படியாவது காப்பாற்றுங்கள்."

இப்படிக்கு—சுந்தரி.

குமரன் :—மீனு...சுந்தரி...சுந்தரி...மீனு...நம்குழந்தை-குழந்தை முத்து என்னிடம்தான் இருக்கிருன் மீனு

உன்மீனு :— ஆ...என் குழந்தையா.....

(குமரன் மீனுவை அழைத்துச் செல்லுகிருன்)

காட்சி 42

குமரன் :— என் மீனுவை பார்த்தீர்களா? இந்தக் கொடிய முகத்தை பார்க்கக்கூடாது என்று குருடியாகி விட்டாள்.

மீனு :— குழந்தையின் முகத்தை பார்க்க முடியாத பாவியாகி விட்டேன்! முத்து...நீ எப்படி இருக்கிறாய்? உன் அப்பாவைப் போல் சிகப்பாகவா இருக்கிறாய்? என்னைப் பார்த்தால் உனக்கு பிச்சைக்காரி போலவா தெரிகிறது? நான் பிச்சைக்காரி அல்ல! ஜமீன்தார் மனைவி! ஒங்க அப்பா ஜமீன்தார்!

குமரன் :—மீனு.....அந்தத் தேவையற்ற கிரீடத்தை நான் தேடியதே இல்லை! பொருளை எல்லாம் பொதுவுடமையாக்க எண்ணினேன். ஆனால்.....அந்த ஆசை நெருப்பிலே விழுந்து உயில் சாம்பலாகி விட்டது.

மீனு :— சாம்பலாகவில்லை. உயில் இருக்கிறது.

குமரன் :— உயில் இருக்கிறதா?

மீனு :—ஆம்...வைத்தியரிடம் இருக்கிறது.

குமரன் :— ஜீவானந்தரே! மக்களுக்கு புது வாழ்வு கிடைத்து விட்டது!

(உயிலை கைப்பற்ற குமரன் வைத்தியனிடம் ஓடுகிறான்)

காட்சி 43

(இடம் —ரோடு)

குமரன் :—எங்கே உயில்? உயில் எங்கே?

சஞ்சீவி : உயிலா? ஏதுடாப்பா என்கிட்டே?

குமரன் :— கொடுக்கிறாயா இல்லையா?

(குமரன் வைத்தியனிடம் உயிலை கைப்பற்றுகிறான்)

(சஞ்சீவி மலையப்பனிடம் வருகிறான்)

மலையப்பன் :— என்ன சஞ்சீவி?

சஞ்சீவி :— காரியம் கெட்டு விட்டது! உயிலை குமரன் பிடுங்கிக் கொண்டான்.

மலையப்பன் :— உயிலா? இத்தனை நாளும் உன்னிடமா இருந்தது? துரோகி.

(சஞ்சீவி மலையப்பனால் கொல்லப்படுகிறான்)

காட்சி-44

(கோவிலில் பூஜை நடந்து கொண்டிருக்கிறது. குமரன் உயிலுடன் வருகிறான்)

குமரன் :—பெரியோர்களே! வெற்றி! நம்முடைய கர்மவினையைப்போக்க இந்தகாளிபாபாவின் தயவு தேவை இல்லை! என் உயில்...உங்கள் உயிர் கிடைத்து விட்டது.

(ஜனங்களால் குமரன் தாக்கப்படுகிறான்—கோவிலிலே)

காட்சி-45

(மலையப்பனால் மீனு அலறிக் கொண்டிருக்கிறாள்—வீட்டிலே மீனு பலாத்காரம் செய்யப்பட்டுக் கொண்டிருக்கும் போது—குமரன் வந்து விடுகிறான்)

மலையப்பன் :—டேய் குமரா! அந்திய காலம் நெருங்கி விட்டது.

(குமரன் மீனுவை வெளியே கடத்துகிறான்)

மலையப்பன்:—மரியாதையாக அந்த உயிலை கொடுத்து விடு!

குமரன்:—மலையப்பா! வேடனைப் பார்த்து வேங்கை சொன்னதாம் "அந்த வில்லையும் அம்பையும் கீழேபோட்டு விடு! பிறகு நான் உன்னை வேட்டையாடிக் கொள்கிறேன்" என்று. அதை விட வேடிக்கையான மனிதனப்பா நீ!

மலையப்பன்:—கொடுக்கிறாயா? இல்லையா?

குமரன்:—நீ யார் கேட்க? நான் யார் கொடுக்க? இது மக்களின் சொத்து!

மலையப்பன்:—மக்கள்! மடையனே! அவர்கள் இப்போது உன் மக்கள் அல்ல! மலையப்பனின் துப்பாக்கியில் இருந்து உன்னை நோக்கிப் பாயும் தோட்டாக்கள்!

குமரன்:—அதனால் தான் சொல்லுகிறேன்— துப்பாக்கியை உடைத்தெறிய வேண்டுமென்று.

மலையப்பன்:—குமரா! பலி பீடத்தில் தலையைவைத்து விட்டாய்.

குமரன்:—கொல்! ஆனால் கொடியவனே! கொலை புரிந்தால் கொள்கை அழிந்து விடுமென நினைக்காதே!

மலையப்பன்:—உன் எண்ணம் சுக்கு நூறுகப் போய் விடும்!

குமரன்:—நீ சரித்திரத்தின் ஒரு பாதியைத்தான் படித்திருப்பாய்! சுக்கு நூறுகப் போனவர்களின் எலும்பு கனை பொறுக்கி வைத்துக் கொண்டு — கஷ்டப்பட்டு கண்ணீர் சிந்தியவர்களின் கணக்குகளை எழுதி—அந்தக் கண்ணீர்த்துளியின் அடிப்படையிலே எழுந்த புரட்சி அத்தியாயத்தை நீ படித்திருக்க மாட்டாய்! பார்வையிலே பழுது ஏற்பட்டதால் அல்ல! படித்தால் பாவம் என்று உன்

பரம்பரை வேதம் எழுதி வைத்திருப்பதால்! தீ வைத்தாலும் சரி, திருட்டுத்தனமாக தாக்கிலுலும் சரி! தேனீக்கள் தேன் எனக் கொட்டினுலும் சரி! சிறைச்சாலே வாய் திறந்து வாவேற்றுலும் சரி! மொட்டை யடித்தாலும் சரி! மூர்க்கத்தனம் செய்தாலும் சரி! அழிக்க முடியாத பகுத்தறிவுக் கொள்கை இது! பத்தரை மாத்துத் தங்கம்!

மலையப்பன் :—விடு! இல்லா விட்டால் இந்த வீடே உனக்கு சுடுகாடாகி விடும்.

(இருவருக்கும் சண்டை மூளுகிறது. வெளியே நின்ற பூசாரி தீயிடுகிறான். குமரன் குழந்தையை தூக்கிக் கொண்டு வெளியேறுகிறான். மலையப்பன் குமரனல் தாக்கப்பட்டு கீழே சாய்ந்தான். இது தான் குமரனின் இறுதி மூச்சு)

குமரன் :—உயில் ... உயிர் ... உரிமைச் சாஸனத்தை கொண்டு வந்த எனக்கு மரண சாஸனமா? இதோ இந்த போலீஸ்காரர்கள் என்னைக் கைதி செய்யக் கூடாது என்று அன்று தடுத்தீர்கள். இன்று அதே போலீஸ்காரர்கள் உங்களிடம் இருந்து என்னை காப்பாற்ற வந்திருக்கிறார்கள். அப்படி என்னகெடுதி செய்து விட்டேன் நான் உங்களுக்கு?

(மீனு வருகிறுள்)

குமரன் :—உயிர்விடப் போகும் நான் கடைசியாக உன்னிடம் ஒரு உதவி கேட்கிறேன். உனக்கு என் மேல் அன்பு இருக்கிறது.

மீனு :—எது வேண்டுமானுலும் செய்கிறேன். குமரன்!

குமரன் :—நீ வாழ வேண்டும்.

மீனு :—நான் வாழ முடியாதவள் குமரன்!

குமரன் :—உனக்காக அல்ல! குழந்தைகளுக்காக! ஜீவானந்தரே! என் சொத்துக்களை மக்களுக்கு சொந்த


மாக்குகிறேன்! நான் தான் சாகிறேன். ஆனால், என் எண்ணங்கள் சாகவில்லை. சாகாது ... என்ற மனத் திருப்தியோடு நான் உங்களை விட்டுப் பிரிகிறேன். வாழ்க சுயமரியாதை, வெல்க பகுத்தறிவு.

(குமரன் உயிரை இழக்கிறான்)

"உலகைத்திருத்தும் உத்தமர்களுக் கெல்லாம் இது தான் முடிவா?"

இதை மாற்றி அமைப்பது யார்?

நாடம்



அச்சிட்டது ஆரதி பிரஸ், சென்னை—12.